மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

**Focus**

## குழந்தைத் தொழிலாளர்களும் கல்வி உரிமையும்

பேராசிரியர். சாந்தா சின்கா, தலைவர், ***NCPCR***, புதுடெல்லி

**முகவுரை:**

நமது தேசிய குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புக் கொள்கை, வேலை செய்யும் இடங்களில் தாங்கள் அவமதிக்கப்படுவதற்கு எதிராகவும், அவமானப் படுத்தப்படுவதற்கு எதிராகவும் அன்றாடம் குழந்தைகள் நடத்துகிற போராட்டங்களுக்கு உதவி செய்வதாக இருக்க வேண்டும். மேலும் குழந்தை பருவ இயல்புகளை இழப்பது, தவிப்பு, பசி, படிப்பின்மை, எதேச்சாதிகாரம் மற்றும் கன்னியமாக அவர்கள் வாழ அடிப்படை உரிமைகளை மறுப்பது போன்றவற்றால் நாம் அவர்களுக்கு ஏற்படுத்தும் பாதிப்புகளை இந்தக் கொள்கை அங்கீகரிக்க வேண்டும்.

அப்படிச் செய்வதற்கு தேசியக் கொள்கை சில அடிப்படை உண்மைகளில் வேர் பெற்று இருக்க வேண்டும். உதாரணமாக (i) குழந்தைத் தொழிலும், வறுமையும் ஒன்றை ஒன்று வலுப்படுத்துவதோடு வறுமையின் முக்கிய காரணமாக இருக்கிறது, (ii) குழந்தைத் தொழில் முறை தழைத்து நீடித்துக்கொண்டு இருப்பதற்கு பொருளாதாரம் அல்லாத காரணங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. (iii) கல்வியின்மை முக்கிய பொருளாதாரம் அல்லாத காரணியாகும். பெருகிவரும் பொருளாதார முன்னேற்ற சூழலில் பல தலைமுறைகளாக குழந்தைத் தொழிலாளர்களை வறுமையிலேயே வைத்து இருக்கிறது. (iv) குழந்தைத் தொழில் ஈடுபாடே கல்விப்பெறும் வாய்ப்பை, பள்ளியிலும் பள்ளிக்கு வெளியிலும் தடுத்துவிடுகிறது. (V) வறுமையில் உள்ள குடும்பங்களும் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி படிப்பதற்கு ஆதரவுக் கொடுக்கலாம்.

**கொள்கையின் முக்கியத்துவம்:**

2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 0 முதல் 4 வயது நிரம்பிய குழந்தைகளில் 5 லட்சத்து 79 ஆயிரத்து 841 குழந்தைகள் வீட்டு வேலை சார்ந்த வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பது ஒரு தேசிய அவமானமாகும். இவர்களும் இன்னும் பல குழந்தைகளும் பள்ளிக்கு உள்ளேயும், பள்ளிக்கு வெளியேயும் கல்வி உரிமையை அடைய முடியாதவர்களாக உள்ளனர்.

18 வயதுக்குள் அனைத்துக் குழந்தைகளையும் படிப்பின் வாசனையை நுகர முடியாத, அனைவரையும், அவர்கள் பள்ளிபடிப்பை பாதியில் நிறுத்தியவர்கள் ஆக இருந்தாலும், அல்லது பள்ளிப் பதிவேடுகளில் பெயர் இருந்தும் வேலைக்கு செல்பவர்களாக, வீட்டு வேலை அல்லது எந்த வேலை செய்பவர்களாக இருந்தாலும் அல்லது எவ்வகையிலும் சேராமல் விடுபட்டுப் போனவர்களையும் கணக்கில்

**CHILDREN'S VOICES**
***for* Human Rights**
**51**
**2008**

எடுத்துக் கொள்ள வேண்டும். ஏற்கவியலாத எந்த வடிவத்தில் குழந்தைகள் வேலையில் ஈடுபட்டு இருந்தாலும் அவர்களை கண்டறிந்து பள்ளியில் சேர்க்கப்பட்டு பள்ளியிறுதி வகுப்பு முடிக்கும் வரை, அவர்களது கல்வி உரிமை உறுதி செய்யப்பட வேண்டும்.

**சட்டம் மற்றும் கொள்கை சீர்த்திருத்தங்களுக்கான கொள்கை:**

1. மக்கள் தொகை கணக்கெடுப்பு 2001ன் படி 5 முதல் 14 வயதிற்குட்பட்ட உள்ள 13 மில்லியன் குழந்தை தொழிலாளர்கள் பொருளாதார செயல்பாட்டில் பேர் உள்ளனர். என்.எஸ்.எஸ் ஓ 61வது சுற்று (2004 –05)ன் படி இந்தியாவில் 8.6 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். உரிமை கண்ணோட்டத்தில் ''குழந்தைத் தொழிலாளர்கள்'' என்ற பதத்திற்கு முறையான கருத்தோட்டம் தேவை சூழ்நிலைக் காரணமாகவே வேலையில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது என்ற கருத்து பரவலாக எற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

2. குழந்தைத் தொழில் பற்றிய விளக்கம் முழுநேர முறை சார்ந்தக் கல்வி அடைவதோடு தொடர்புபடுத்த வேண்டும்.

3. ஒருசாரார் பள்ளிக்கும் போகாமல், வேலைக்கும் போகாமலிருக்கும் பிள்ளைகள் என்று வகைப்படுத்தி உள்ளனர். இவர்களை ''எங்குமில்லாத குழந்தைகள்'' என்று அழைக்கின்றனர். எனவே, 2001 கணக்கெடுப்பின்படி 8.5 மில்லியன் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாதவர்கள். இவர்களில் 12.7 மில்லியன் குழந்தைகள் வேலைக்குச் செல்பவர்களாக, பள்ளிக்கு போகாதவர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அப்படியானால் 7.5 மில்லியன் குழந்தைகள் ''எங்குமில்லாத குழந்தைகள்'' ஆகும். உண்மையில் எங்குமில்லாத குழந்தைகள் எங்கும் காணப்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண் குழந்தைகள் ''எங்குமில்லாத குழந்தைகள்'' குழந்தைத் தொழிலாளர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.

4. அனைத்துக் குழந்தைகளும் (''எங்குமில்லாத குழந்தைகள்'')அரசின் கொள்கையிலிருந்து விலக்கி விட மேலும் ஒரு வழி உள்ளது. அது எப்படியெனில் குழந்தைத் தொழிலில், குழந்தைகளால் செய்யப்படும் வேலை என்றும், ஊதியத்திற்காக செய்யப்படும் வேலை என்றும் பிரிப்பதின் மூலம் தொழிலாளர் அமைச்சகம் நம் நாட்டின் 2 மில்லியன் குழந்தைகள் அபாயகரமான வேலையில் ஈடுபட்டுள்ளதாகக் கணக்கிட்டு அவர்களை முதலில் விடுவிக்க அனைத்து திட்டங்களும் வகுத்தனர். குழந்தைத் தொழிலை சுரண்டல் மற்றும் சுரண்டலில்லாத என்று பிரிப்பது அடிப்படையில் பிழையான அணுகுமுறை. ஏனெனில் குழந்தைத் தொழில், குழந்தைகளால் செய்யப்படும் வேலை என்று பிரித்துப் பார்க்க சரியான அளவுகோல் நம்மிடமில்லை. குழந்தைகளால் செய்யப்படும் வேலையிலிருந்து குழந்தைத் தொழிலுக்கு மாறுவதை தடுக்க முடியாது என்பதால் இம்மாதிரி வகைப்படுத்துதல் தவறு. குழந்தைகளால் செய்யப்படும் வேலை குழந்தைத் தொழில், அபாயகரமான வேலை, அபாயகரமற்ற வேலை என்று பிரிக்கக்கூடாது.

5. குழந்தை கடத்தி செல்லப்பட்டு தொலைதூர இடங்களில் விவசாயம் அல்லது விவசாயம் சார்ந்த தின ஊதிய அடிப்படையில் அல்லது கொத்தடிமை முறையில் 3ல் இரண்டு குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர். இதுகுறித்து எவரும் கண்டு கொள்வதில்லை. இது முறைசாரா தொழிலாளர்களில் 73% ஆகும். அமைப்புச் சார்ந்த தொழிலாளர்களில் 9% ஆகும். இவர்கள் மொத்த தொழிலாளர்களில் பெரும்பான்மை எண்ணிக்கையில் உள்ளதால், இவர்களை குழந்தைத் தொழிலாளர்களாக வகைப்படுத்த வேண்டும்.

6. பெண் குழந்தைகளால் செய்யப்படும் ஏராளமான வேலைகள் குழந்தைத் தொழில் பட்டியலில் சேர்க்கப்படுவதேயில்லை. பெண்குழந்தைகள் வீட்டில் தண்ணீர் சுமப்பது, விறகுகள் பொறுக்குவது, தம்பி தங்கைகளை கவனிப்பது போன்ற வேலைகளை இயந்திரத் தனமாக செய்துக் கொண்டு இருக்கின்றனர். சம்பாதிக்க தயார் ஆவதற்கு முன்பே அனைத்து வீட்டு வேலைகளையும் சிறுவயதிலேயே செய்ய தகுதி அடைந்து விடுகின்றனர். இத்தகைய வேலைகள் குழந்தைத் தொழிலாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

7. தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பை சேர்ந்த குழந்தைகள் சட்டரீதியாகத் தடை செய்யப்படாத பல வேலைகளில் ஈடுபடுகின்றனர். எனவே குழந்தைத் தொழிலாளர் என்னும் பதத்திற்கான விளக்கம், அனைத்து சமூகக் குழந்தைகள், படிக்கும் உரிமை பறிக்கப்பட்டு குழந்தைத் தொழிலில் ஈர்க்கப்படும் எல்லோரையும் உள்ளடக்க வேண்டும்.

8. குழந்தைகளால் செய்யப்படும் வேலை மற்றும் ஊதியத்திற்காக செய்யப்படும் வேலை என்று பாகுபடுத்தும் பொழுது ''எங்குமில்லா குழந்தைகள்'' என்னும் வகையை அறிமுகப்படுத்தும் பொழுது, ''அபாயகரமான

வேலையை ஒழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கும் பொழுது அல்லது அபாயகரமற்ற வேலைகளில் ஆண் குழந்தைகளோடு பெண்குழந்தைகளும் ஒரே மாதிரியான வேலையில் ஈடுபடுத்தும் முறையை கண்டுக்கொள்ளாமல் இருப்பது போன்ற அணுகுமுறைகளால் கல்வி மறுக்கப்பட்ட பல குழந்தைகளை பட்டியலில் சேர்க்கத் தவறிவிடுகின்றனர். குழந்தைகளால் செய்யப்படும் வேலைக்கும், ஊதிய அடிப்படையிலான குழந்தைத் தொழிலுக்கும் ஒரு தொடர்பு உண்டு. குழந்தைகளால் செய்யப்படும் வேலையே ஊதிய அடிப்படையிலான குழந்தை தொழிலாக மாறுகிறது.

9. சமீப காலங்களில், குழந்தைத் தொழிலாளர் பற்றிய விளக்கம் மேற்கூறப்பட்ட அனைத்து வகை குழந்தைத் தொழில்களையும், அனைத்து சமூக குழந்தைத் தொழிலாளர்களையும், உள்ளடக்கியதாக இருக்கிறது இந்த விளக்கம் ஊதியத்திற்காக மற்றும் ஊதியத்திற்கல்லாத அனைத்து வேலைகளையும் குடும்ப வேலைகள் அல்லது குடும்பத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கு செய்யப்படும் வேலைகளையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

**குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கச் சட்டங்கள்:**

**சில குறைபாடுகள் :**

1. அரசியல் சாசன பிரிவு 24ன்படி 14 வயதுக்குட்பட்ட எந்த குழந்தையையும் தொழிற்சாலைகளிலோ அல்லது சுரங்கங்களிலோ அல்லது எந்த அபாயகரமான வேலைகளிலோ ஈடுபடுத்தக்கூடாது. மேலும் 39வது பிரிவு பொருளாதார நெருக்கடியைக் காரணமாகக் கொண்டு குழந்தைப் பருவத்துக்கு ஒவ்வாதவேலைகளில் குழந்தைகள் தள்ளப்பட்டு பிஞ்சு வயதில் அவர்கள் உரிமை பறிக்கப்படக்கூடாது என்ற கொள்கையை மாநிலங்கள் பின்பற்ற நிர்பந்திக்கிறது. தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 21 A பிரிவின் படி இலவச கட்டாயக் கல்வியை 6 முதல் 14 வயது குழந்தைகளுக்கு வழங்குவது மாநிலங்களின் கடமை.

2. குழந்தைத் தொழில் முறையை கையாள குறிப்பிடத்தக்க சட்டம், குழந்தைத் தொழில் (தடை மற்றும் ஒழுங்குப்படுத்துதல்) சட்டம் 1986. இந்த சட்டமானது சில தொழில்களில் மற்றும் சில செயல்பாடுகளிலும் குழந்தைத் தொழில் முறையை முற்றிலும் ஒழிக்கவும், மற்ற சில வேலைகளில் வேலை செய்யும் சூழலைக் கட்டுப்படுத்தவும் முற்படுகிறது. சட்டத்தினால் தடை செய்யப்பட்ட தொழில்கள் மற்றும் செயல்பாடுகள் ஒரு குடும்பத்திற்குள் செய்யும் பொழுது சட்டம் தடுப்பதில்லை. இந்த சட்டத்தின்படி குடும்பதிற்காக வீட்டிற்குள் செய்யப்படும் வேலை முறைகளை கட்டுப்படுத்த இயலாது.

3. இந்த சட்டத்தை வலுவிழக்கச் செய்யும் ஓட்டைகள் அதிகமாக உள்ளது. குடும்பதினரோடு சேர்ந்து செய்யும் வேலை இந்த சட்டத்தின் பார்வையிலிருந்து தப்பித்து விடுகிறது. இதனால் பல்வேறுபட்ட குழந்தை வேலைகள் குடும்ப வேலையாக கருதப்படுகிறது. இத்தகைய ஓட்டைகள் முதலாளிகளால் பெரிதும் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. இதோடு மட்டுமல்லாமல் தொழிலாளர் சந்தையானது நாளுக்கு நாள் முறைசாரத் தன்மையை அடைந்து வருவதின் மூலம் பல்வேறு தொழில்களில் துணை ஒப்பந்த முறை (Sub contract) அதிகரித்து வருவதினாலும், வெளியில் செய்யும் வேலைகள் பல வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு வீட்டின் பிற அங்கத்தினரோடு பகிர்ந்து செய்யப்படுகிறது இத்தகைய வேலைகள் குழந்தைத் தொழிலாக கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.

4. இந்த சட்டம் குழந்தைத் தொழில் முறை அதிகம் காணப்படும் விவசாயமும் அதனைச் சார்ந்த தொழில்களையும், கணக்கில் கொள்வதில்லை. இந்த வகையில் உள்ள குழந்தைகள் பெரும்பாலானோர் பள்ளியிலிருந்து விடுபட்ட பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்த குழந்தைகளும், பெண் குழந்தைகளும் சிறுபான்மையினரின் குழந்தைகளும் ஆவர். தடை செய்யப்பட்ட பல்வேறு தொழில்களில் உள்ள குழந்தைகளும் இந்த சட்டத்தின் பார்வைக்குள் வருவதில்லை.

5. இந்த சட்டத்தின்படி குழந்தைத் தொழிலாளரை ஒழுங்குப்படுத்துவதே கல்வி உரிமைக்கு எதிரான செயல் ஆகும். ஏனென்றால் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்குள் குழந்தை தொழிலை அனுமதிப்பதே அரசியல் சாசனத்துக்கு புறம்பானது ஆகும்.

6. 1986–ஆம் ஆண்டின் குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குப்படுத்துதல்) சட்டம் 15 முதல் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளை கணக்கில் கொள்வதில்லை. எழுத்தறிவுள்ள அல்லது எழுத்தறிவற்ற தொழிலாளர் கூட்டத்தில் இவர்கள் அடங்குவர். இவர்களின் அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டு சமூக அந்தஸ்தை இழந்த ஒதுக்கப்பட்ட பிரிவினராக சேர்ந்து விடுகின்றனர்.

7. இந்த சட்டமானது குழந்தைகளின் உரிமை மீறல், குறிப்பாக கல்வி உரிமைகுறித்து மவுனமாக இருக்கிறது. குழந்தைகளின், உரிமைகள் பறிக்கப்படுவதினாலும், தன்மானம் மற்றும் சுதந்திரம் இழக்கப்படுவதினாலும் ஏற்படும் பாதிப்புகளுக்கு நஷ்டஈடு பற்றி கணக்கில் கொள்வதில்லை.

8. வறுமைபற்றிய வாதங்களின் அடிப்படையில் இந்த சட்டமானது, குழந்தைகளுக்கான சட்டம் இயற்றும் வாய்ப்புக்களைக் குறைக்கிறது. குழந்தைத் தொழிலாளர் முறை முற்றிலும் ஒழிக்கப்பட முடியாத ஒன்று என்னும் கருத்து நிலவுவதால், குழந்தைத் தொழில் முறையை முற்றிலும் தடைசெய்ய இயற்றப்படும் சட்டங்கள் நடைமுறைப்படுத்தபட முடியாதவை ஆகிவிடும். எனவே மிகவும் கொடியதான குழந்தைத் தொழில் முறையைத் தடைசெய்யவும் ஏனைய குழந்தை தொழில் முறையை ஒழுங்குப்படுத்தவுமே சட்டங்களால் முடியும். (குழந்தை தொழில் தடை மற்றும் ஒழுங்குப்படுத்தும் சட்டம் – 1986) இதையே செய்திருக்கிறது.

9. எல்லா வடிவங்களிலும் செயல்படும் குழந்தைத் தொழில் முறையை ஒழிக்க முடியாது என்பதினால், அவற்றில் சிலவற்றை முதலில் கவனம் செலுத்தி மற்றவைகளை கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்படுத்தலாம் என்ற வாதமும் இருந்து வருகிறது. எனவே குறிப்பிட்ட வகையைத் தேர்வு செய்து அதில் பணியாற்றும் குழந்தைகளை விடுவிக்க உடனடி செயல்பாட்டை எதிர்பார்க்கின்றோம். ஆனால் நடைமுறை சிக்கல்களை கணக்கில் கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்கிறோம். இத்தகைய போக்கே சட்டத்தை அரை மனது கொண்டதாகி அடிப்படை கல்வி உரிமை மற்றும் அனைவருக்கும் கல்வி என்னும் இலக்கிலிருந்து விலகி விடுகிறோம்.

10. நடைமுறையில் தடைசெய்யப்பட்ட துறைகளில் உள்ள குழந்தைகளை மட்டும் பிரித்து எடுத்து சட்டத்தை அமுல்படுத்தி அந்த குழந்தைகளுக்கு புனர்வாழ்வு அளிப்பது சிரமமான ஒன்றாக இருக்கிறது. எனவே தடைசெய்யப்படாத துறைகளிலும் உள்ள குழந்தைகளையும் மீட்டு எடுக்க வேண்டும். ஏனெனில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவர்களுக்கு குழந்தைத் தொழிலாளர்களை பாகுபடுத்துவதில் ஏராளமான உட்குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**கல்வித் தேவையும், குழந்தைத் தொழிலாளர் மலிவுச் சந்தையும்:**

1. ஏழை மக்களிடம் இன்று படிப்பின் தேவை என்றுமில்லாத அளவுக்கு அதிகமாக பெருகி இருக்கிறது. மிகவும் ஏழ்மையாக உள்ள பெற்றோர்கள் கூட தங்கள் குழந்தைகளுக்கு முழுநேர கல்விக் கொடுக்க வசதியும் ஆர்வமும் கொண்டுள்ளனர். மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்கூட தங்கள் பிள்ளைகள் குறைந்தபட்சம் 10ம் வகுப்பு வரையிலாகிலும் படிக்க வேண்டுமென்று நிறைய தியாகங்களை செய்கின்றனர். ஆரம்பத்தில் தங்கள் குழந்தைகளை வேலையிலிருந்து விடுவிக்க தடையாக இருந்த பெற்றோர் கூட, பின்னர் மனமாற்றம் கண்டுள்ளனர். குழந்தை தொழிலிருந்து விடுவிக்கப்பட்டு பள்ளியில் சேர்ந்து தன்மகன் மாணவனாக மாறியாதை பெற்றோர் பெருமையாகக் கருதுகின்றனர். ஏழை மக்களின் மேல் நம்பிக்கை வைத்தால் அவர்களும் குழந்தைத் தொழில் ஒழிப்பு முயற்சியில் முழு ஒத்துழைப்புக் கொடுத்து எதிர்கால சந்ததியினரை வறுமையிலிருந்து மீட்க முடியும் என்று மேலே கூறப்பட்ட முன்னேற்றங்கள் காட்டுகின்றன.

2. ஏழ்மையில் உள்ள மற்றும் முதல் தலைமுறையாக பள்ளி செல்லும் குழந்தைகளையும் ஈர்ப்பதற்கு கல்வி முறை தயாராக இல்லை. இதனால் படிப்பறிவற்ற பெற்றோரின் குழந்தைகள் எதிர் நோக்கும் பிரச்சனைகளை உணர்வது அவசியம். மிகவும் மோசமான கட்டமைப்பு மற்றும் வசதிகள் (முக்கியமாக அரசுப் பள்ளிகள்), குழந்தைகளை உணர்வற்று கையாளும் முறைகளால் பள்ளியை விட்டு வெளியே தள்ளப்படும் நிலையும் இதில் அடங்கும்.

3. குழந்தைகளுக்கு கல்வி வேண்டும் என்ற நிலைக்கு எதிராக மலிவான ஊதியத்திற்கு வேலை செய்ய பெருகி வரும் சந்தையின் விசை குழந்தைத் தொழிலாளர் முறையை நிலை நிறுத்துகிறது. குழந்தைகளை அதிக நேரம் மனித தன்மையற்ற சூழல்களில் வேலையில் ஈடுபடுத்த முடியும். இத்தகைய சுரண்டல் உதவி என்ற பெயரில் ஒரு கருணையாகக் கருதப்படுகிறது. இத்தகைய குழந்தைகள் சுரண்டப்படுவதை சமூகம் கண்டுக் கொள்ளாமல் இருப்பதால் முடிவில்லாத ஒன்றாக இருக்கின்றது. பெற்றோர் மனதில் கூட ஏற்றுக் கொள்ளும் மனோபாவம் பரவியிருக்கிறது. சமூகக் கட்டுப்பாடுகளும் இல்லாத நிலையில் அரசும் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு சட்டங்களை சரிவர கையாளமல் இருப்பதால் குழந்தைத் தொழிலாளர் சந்தை தழைத்து நிற்கிறது.

4. தமது குழந்தைகள் கல்வி பெறுவதற்காக ஒவ்வொரு பெற்றோர் செய்யும் முயற்சிகளுக்கு எதிரான குழந்தைத் தொழிலாளர் சந்தை முறியடிக்கப்பட முறையான கொள்கை மற்றும் சட்டம் வகுக்கப்பட

வேண்டும்.

**சட்ட வரையறைகளில் தேவைப்படும் மாற்றங்கள் :**

1. சிறார் உரிமை (சிறார் பாதுகாப்பு) சட்டம் – 2000இ மற்றும் டிசம்பர் 11– 1982ல் இந்தியா கையெழுத்திட்ட குழந்தை உரிமைக்கான ஐ.நா. உடன்படிக்கை ஆகியவற்றிற்கு ஏற்ப "குழந்தை என்பதற்கான பொருள் 18 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளையும் குறிக்க வேண்டும்.

2. சட்ட வரம்பு இந்த பொருளை தெளிவுப்படுத்த வேண்டும் அனைத்து வகை வேலையில் ஈடுபடும் குழந்தைகளையும் இதில் கணக்கில் கொள்ள வேண்டும்.

3. முழு நேரக் கல்வி உரிமையை பெற முடியாமல் தடுக்கும் அனைத்து வகை வேலைகளையும் குழந்தைத் தொழில் என்னும் பொருள்பட வேண்டும்.

4. அனைத்து வகை குழந்தை தொழில்களையும் ஒழிக்கும் பொருட்டு, குழந்தைத் தொழில் முறையை ஒழுங்குப்படுத்தும் சட்ட விதிகளை நீக்க வேண்டும். குழந்தைகளை தொழிலில் ஈடுபடுத்துவதை தடுக்கும் விதமாக சட்ட செயலாக்க முறையை வலுப்படுத்தி தண்டனைச் சட்டங்களையும் மாற்றியமைக்க வேண்டும்.

   மேலும் போதுமான நலத்திட்ட உதவிகள் சட்ட ரீதியான பாதுகாப்பு, மற்றும் அடிமை பட்டிருந்தமைக்குத் தக்க ஈட்டுத் தொகையும் உறுதி செய்யப்பட வேண்டும்.

**கொள்கை வரம்புகள்:–**

1. அனைத்துக் குழந்தைகளும் 18 வயது வரை முறைசார் கல்வி பெற வேண்டும். எந்தக் குழந்தையையும் வேலைக்கு செல்லக் கூடாது என்று தெளிவாக எடுத்துரைக்கும் கொள்கையே முதல் படியாகும். இதை இலக்காகக் கொண்டு எந்தக் காரணத்தினாலும் தளர்த்தப்பட முடியாத உறுதியான கொள்கை வகுத்தல் வேண்டும்.

2. தேசியக் கொள்கையானது குறிப்பிட்ட இலக்கு மற்றும் பிரிவு அடிப்படையிலிருந்து விலகி கல்வியை நிறுத்திவிட்டு எத்தகைய வேலையில் ஈடுபட்டு இருந்தாலும் அனைவரையும் உள்ளடக்கி, உரிமை அடிப்படையில் உருவாக்க வேண்டும்.

3. அத்தகைய குழந்தைத் தொழிலாளர்களுக்கான தேசியக் கொள்கை, பள்ளியில் சேரும் அனைத்து குழந்தைகளும் 10ம் வகுப்பு வரை படிப்பை முடிப்பார்கள் என்று எதிர்பார்ப்போடு போதிய அளவு ஆசிரியர்களை நியமனம் செய்து, தேவையான அளவு பள்ளி உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டும். கல்வி அமைப்பானது (system) அனைத்து அடுக்குகளான மழலையர் பள்ளி, ஆரம்பப் பள்ளி, நடுநிலை, உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிகளில் பிரத்யேக பிரச்சனைகளை சமாளிக்கத் தயார் நிலையில் இருக்க வேண்டும். இதற்கு மாறாக ஒன்றன் பின் ஒன்றாக இந்த அடுக்குகளை தனித்தனியே கையாளும் முறையைத் தவிர்க்க வேண்டும்.

4. முழுநேர முறைசார் கல்வி தொடர்ந்து கிடைக்க உறுதி செய்ய தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், சிறுபான்மையினர் குழந்தைகளுக்கும் கூடுதலான பள்ளிகள், விடுதிகள் கட்டப்பட வேண்டும். ஏனெனில், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினர் குழந்தைகள் ஏராளமாணவர்கள் குழந்தைத் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

5. கல்வியை இழந்து வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் குழந்தைகளின் வயது மற்றும் அடிப்படை கல்வியின் அளவைப் பொறுத்து தக்க வகுப்புகளில் சேர்க்க நாம் ஆயத்தங்கள் செய்ய வேண்டும். அத்தகைய ஆயத்தப் பணிகள் கல்விக்கான தேவையை அளவிட்டு, போதிய கட்டமைப்புகள், ஆசிரியர்களை நியமிப்பதோடு முதல் தலைமுறை மாணவர்களின் தேவைகளையும் தன்மைகளையும் முழுமையாக உணர்ந்துள்ளதாக இருக்க வேண்டும்.

6. பள்ளியிலிருந்து இடைநின்றுவிட்ட 15 முதல் 18 வயது வரை உள்ள மாணவர்கள் மீண்டும் முறைசாராக் கல்வி பெறும் பொழுது அவர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான பயனுள்ள கல்வி தர வேண்டும். குழந்தையானது குறைந்த பட்சம் 10ம் வகுப்புவரை கல்விப் பெற்று மேலும் 18 வயது வரை படிப்பதற்கான வழிவகைகளை அரசு செய்ய வேண்டும். 10ம் வகுப்புக்குப் பிறகு அவர்கள் மாற்றுக் கல்வி முறையை விரும்பினால் அதற்கும் வழிவகை செய்யும் வகையில் தரமான பாடத் திட்டங்கள் ஏற்படுத்த வேண்டும்.

7. இந்த பிரச்சனை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த மத்திய மாநில அரசுகளும் நீண்ட நாள் தொடர்ச்சியாக பிரச்சாரம் செய்ய வேண்டும்.

**முடிவுரை:–**

குழந்தைத் தொழிலாளரின் ஒரு நாள் வாழ்க்கையை கூர்ந்து ஆராய்ந்தால் அவர்கள் எவ்வளவு தனிமைப்படுத்தப்பட்டு பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறார்கள் என்று அறிய முடியும். மேலும் அவர்கள் எப்படி சத்துள்ள உணவின்மை, ஆரோக்கியக் குறைவு, படிப்பின்மை ஆகியவற்றால் குறைபட்டு வேலை இடங்களில் பல்வேறு வேதிப் பொருட்கள் மற்றும் ஏனைய மாசுகளால் பாதிக்கப்பட்டு அடிப்படை மனித உரிமையை இழக்கின்றனர் என்று தெரியவரும்.

குழந்தைகள் ஒரே மாதிரியான மூளையை மழுங்கடிக்கும் வேலையை திரும்பத் திரும்பச் செய்யும் நிலையிலிருந்து மீட்கப்பட்டு பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும். முதலாளிக்கு லாபம் பெற்றுத்தர தங்களை சுரண்ட அனுமதிக்கும் போக்கிலிருந்து மீண்டு பள்ளியில் சேர வேண்டும். அதுவே அவர்களின் நல்வாழ்விற்கு மூலதனமாக அமையும். தங்கள் உள் திறமையை வெளிப்படுத்த முடியாமல் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு, வாழ்க்கையில் ஒதுக்கப்பட்டு, அந்தரத்தில் தொங்கும் வாழ்க்கையிலிருந்து விடுபட்டுப் பள்ளியில் சேர வேண்டும். மேலும் பொழுது போக்கு விளையாட்டு மற்றும் கலாச்சார அம்சங்கள், ஆரோக்கியம் மற்றும் மதிய உணவு போன்றவற்றை அனுபவிக்க கல்வியில் சேர வேண்டும்.

சிந்தனைத் திறமிக்க குடிமக்களாக, அறிவு சார்ந்த முடிவுகள் எடுப்பவர்களாக, தங்கள் சமுதாயத்திற்கு உபயோகமானவர்களாக குழந்தைகள் விளங்குவதற்கு வேலைக்குச் செல்லாமல் பள்ளிக்குச் செல்ல வேண்டும். தலைமுறை தலைமுறையாக உள்ள வறுமை, அறியாமைபிடியிலிருந்து விடுபட குழந்தைகள் பள்ளிக்கு செல்ல வேண்டும். சிந்திக்க, எதையும் ஆராய்ந்து கேள்விகளை எழுப்பி அறிவைப் பெற தங்களை தாங்களே முன்னேற்றி, விடுவித்து எதிர்கால சந்ததி குழந்தைகள் சரியான பாதையில் சென்றிட இன்றைய குழந்தைகள் வேலைக்குச் செல்லாமல் பள்ளிக்குச் செல்ல வேண்டும். நியாயம், தர்மம், நேர்மையுடன் ஜனநாயக நாட்டில் ஆழமாக வேரூன்ற குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல வேண்டும்.

## தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (NCPCR)

(யூனிசெப் மற்றும் ஐஎல்ஓ உடன் இணைந்து)

''கல்விக்கான உரிமை மற்றும் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு''

பற்றிய தமிழ்நாடு மாநில அளவிலான கலந்துரையாடலில் சுற்றுக்கு விடப்பட்டது

30 மற்றும் 31 அக்டோபர் 2008, சென்னை

**<u>இணைந்த ஏற்பாடு:</u>** குழந்தை உழைப்பு எதிர்ப்பு பிரச்சாரம் – தமிழ்நாடு *(CACL,* குழந்தை கடத்தலுக்கு எதிரான பிரச்சாரம் – தமிழ்நாடு (*CACT*), & கல்வி

## <u>குமரி அருகே</u>சத்துணவு சாப்பிட்ட 13 குழந்தைகள் மயக்கம்

குமரி மாவட்டம், களியக்காவிளையை அடுத்த சூரியகோட்டில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் 201 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். நேற்று முன்தினம் இங்கு 190 குழந்தைகள். சத்துணவு சாப்பிட்டனர். சிறிது நேரத்தில் அதில 9 குழந்தைகளுக்கு தலை சுற்றல், வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. இதனால் பயந்து போன பெற்றோர் அவர்களை அங்குள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இந்நிலையில் நேற்று காலை பள்ளிக்கு வந்த மேலும் 4 மாணவ, மாணவிகள் மயங்கி விழுந்தனர். இதையடுத்து குழந்தைகளின் பெற்றோர், பொது மக்கள் பள்ளிக்கூடத்தை முற்றுகையிட்டனர். இதையடுத்து உடல் நலம் பாதிக்கப்பட்ட 13 மாணவ மாணவிகளும் ஆறுதேசம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்க்கப்பட்டனர். தகவலறிந்த விளவங்கோடு தாசில்தார் பார்வதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மாணவ, மாணவிகளை பார்த்து நலம் விசாரித்தார். து குறித்து அவர் கூறும் போது, ''சத்துணவுக்கு பயன்படுத்தப்பட்ட அரிசி, பருப்பு போன்றவை கெட்டுப்போயிருந்தது. மேலும் குடி தண்ணீர், சத்துணவு ஆகியவற்றை சோதனைக்கு அனுப்ப உள்ளோம். சோதனை அறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார்.

**– தினகரன், 9.07.2008**

# தமிழக அரசு ஆணை

**சுருக்கம்**

தொடக்கக் கல்வி – தொடக்கக் கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல் – பள்ளி செல்லா குழந்தைகளை முறையான பள்ளியில் சேர்க்க வழிவகை செய்தல் – ஆணைகள் வெளியிடுதல் – குறித்து.

**பள்ளி கல்வி (சி2) துறை**

அ. ஆ. (எம்.எஸ்) எண்.165 நாள் 9/12/2004

படிக்கவும்.

1. அனைவருக்கும் கல்வி திட்டம், மாநில திட்ட இயக்குநரின் கடித எண். 2785/சி/எஸ்எஸ்ஏ/02, நாள் 25/11/02, 15/12/03.
2. தொடக்க கல்வி இயக்குநரின் கடித எண். 17831/கே3/2003, நாள் 23/5/03, 16/3/04.
3. பள்ளி கல்வி இயக்குநரின் கடித எண். 796/ஆர்3/2004, நாள் 17/4/04.
4. அனைவருக்கும் கல்வி திட்டம், மாநில திட்ட இயக்குநரின் கடித எண். 3215/சிஎல்/ ஏ2/எஸ்எஸ்ஏ, நாள் 13/10/04.

*****

**ஆணை:–**

1. அனைவருக்கும் கல்வி (சர்வ சிக்ஷ அபியான்) என்ற திட்டம் தொடக்க கல்வி அனைவருக்கும் கிடைக்க வழிவகுக்கின்றது. இதன் மூலம் 6–14 வயதுள்ள குழந்தைகள் அனைவரும் முறையான அல்லது மற்றும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு தரமான 8 வருட தொடக்கக் கல்வி கிடைக்கப் பெறுகின்றனர். பள்ளி செல்லா குழந்தைகள் முறையான பள்ளியில் சேர்த்து கல்வி பயிலவும் மற்றும் பள்ளி சேர்க்கையில் உள்ள இடங்களை நீக்கும் விதமாக சேர்க்கை விதிமுறைகளை தளர்த்தியும் அரச அனைவருக்கும் கல்வி திட்டத்தின் இலக்கினை எய்திட வழிவகுகின்றது.
2. அதன்படி, பள்ளி செல்லா குழந்தைகள் அனைவரும் முறையான கல்வி பயிலுவதற்கென அரசு கீழ்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை நிர்ணயித்து பள்ளி செல்லா குழந்தைகளின் பள்ளி சேர்க்கை விதிகளை தளர்த்தியுள்ளது.

**பள்ளி சேர்க்கை விதிகள் தளர்த்தப்பட தகுதிபெற்ற பள்ளி செல்லாக் குழந்தைகளின் வகைகள்.**

1. அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் மாற்று பள்ளி மற்றும் புதிய கல்வி மையங்களில் கல்வி பயிலும் பள்ளி இடை நின்ற அல்லது பள்ளியிலேயே சேராத குழந்தைகள், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மற்றும் இண்டஸ் திட்டத்தின் கீழ் அல்லது இதர நிறுவனங்கள்/ துறைகளால் நடத்தப்படும் முறைசாரா கல்வி மையங்களில் பயிலும் குழந்தைகள்.

2. கல்வியறிவு இல்லாத ஏழ்மை நிலையில் உள்ள இடம் பெயரும் குடும்பத்தினைச் சேர்ந்த குழந்தைகள் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள பெற்றோரின் குழந்தைகள், அனாதை/தெருவோர குழந்தைகள் எய்ட்ஸ்/ எச்ஐவி பாதிக்கப்பட்டுள்ள பெற்றோர்களின் குழந்தைகள். மேற்குறிப்பிட்டுள்ள வகை பள்ளி செல்லா குழந்தைகளின் பள்ளி சேர்க்கை விதிகளில் தளர்த்தம்.

1. இக்குழந்தைகள் கல்வியாண்டில் செப்டம்பர் 30ம் தேதிக்கு பின்னரும் சேர்த்துக் கொள்ளப்படுவது.
2. இக்குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேருவதை ஊக்குவிப்பதற்காக பள்ளி தலைமையாசிரியர் பிறப்பு சான்று, சாதி சான்று, மாற்று சான்று ஆகியவற்றை வலியுறுத்தி கோராமல் பள்ளியில் சேர்த்து கொள்ள வேண்டும் தலைமை ஆசிரியர், இக்குழந்தைகளின் சேர்க்கைக்கு பின்னர் இச்சான்றுகளை பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுத்து உதவ வேண்டும்.

   தங்களது அடையாளத்தை தெரிவிக்க இயலாமல் இருக்கும் பாலியல் தொழிலில் ஈடுபட்ட பெற்றோரின் குழந்தைகள் அல்லது
3. எச்ஐவி/ எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் குழந்தைகளை பள்ளி தலைமையாசிரியர் முதலில் சேர்ப்பதைப் போன்றே பெற்றோர் பெயர் தெரியாத குழந்தைகளின் பள்ளி சேர்க்கையில் பள்ளி தலைமை ஆசிரியர் பள்ளியில் சேருவதற்கு அனுமதிக்க வேண்டும். அதன்பின் பிறந்த தேதி பிற ஆதாரங்களைக் கோரிப் பெற்று கொள்ளலாம்.

4. இத்தகைய குழந்தைகளை எந்த வகுப்பில் அந்த குழந்தை சேர்க்கப்பட வேண்டும் என்பதை அந்த குழந்தையின் வயது நிர்ணயம் மற்றும் குழந்தையின் அறிவுத் திறன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தலைமை ஆசிரியர் முடிவு செய்தல் வேண்டும்.

5. இத்தகைய குழந்தைகளுக்கு சான்றுகள் எதுவும் வலியுத்திக் கோராமல் பள்ளி தலைமையாசிரியர் எட்டாம் வகுப்பு வரையில் பள்ளி சேர்க்கைக்கு அனுமதிக்கலாம்.

6. மேலே பத்தி 2ல் குறிப்பிட்டுள்ள ஆணைகளை அமல்படுத்துவதற்கான தகுந்த அறிவுரைகளை வழங்கிட பள்ளி கல்வி துறை இயக்குநர்/ தொடக்க கல்வி இயக்குநர் ஆகியோர்கள் கோரப்படுகின்றனர்.

7. பல்வேறு செயலாணைகள், விதிகள், விதித் தொகுப்புகளில் மேற்குறிப்பிட்ட சேர்க்கை விதி தளர்த்துதல் தொடர்பான திருத்தங்கள் வெளியிடுவதற்கான பிரேரணைகளை அனுப்பி வைக்குமாறு பள்ளி கல்வி இயக்குநர்/தொடக்கக் கல்வி இயக்குநர் ஆகியோர் கேட்டுத் கொள்ளப்படுகின்றனர்.

**/ஆளுநரின் ஆணைப்படி/**

கே. ஞானதேசிகன்
அரசு செயலர்.

**பெறுநர்**

1. மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி திட்டம், சென்னை – 6.
2. பள்ளி கல்வி இயக்குநர், சென்னை – 6.
3. தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
4. மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநர், சென்னை –6.
5. அரசு கல்வி இயக்குநர், சென்னை –6.
6. ஆசிரியர் கல்வி இயக்குநர், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி, சென்னை –6.

/உத்தரவின்படி/
பிரிவு அலுவலர்.

## ஆசிரியை வீசிய டம்ளரால் மாணவியின் கண் பார்வை பறிபோனது

பள்ளி ஆசிரியை டம்ளரை வீசியதில் கண்பார்வையிழந்ததாக சிறுமியின் பெற்றோர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்தனர். நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையை அடுத்துள்ள மணப்படைவீடு கிராமத்தை சேர்ந்தவர் தங்கப்பாண்டி. கூலித் தொழிலாளி, இவரது இரண்டாவது மகள் சுடலி(9). அங்குள்ள டி.டி.டி.ஏ., துவக்கப்பள்ளியில் மூன்றாம் வகுப்பு பயின்றுவந்தாள்.

2007 ஜனவரி 30ல் வகுப்பு நடந்துகொண்டிருந்த போது கவனக்குறைவாக இருந்த மாணவி சுடலி மீது ஆசிரியை விஜயகுமாரி எவர்சில்வர் டம்ளரை தூக்கி எறிந்துள்ளார். இதில், மாணவியின் இடதுகண்ணில் காயம் ஏற்பட்டது. ஆசிரியை விஜயகுமாரியின் கணவர் தேவராஜ், சித்த மருத்துவராக பணியாற்றுவதால், அவரே சுடலியின் கண்ணுக்கு சிகிச்சை அளித்தார். ஆனால், சிகிச்சை பலனளிக்கவில்லை.

கண் பார்வை மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் நெல்லையில் உள்ள அரவிந்த் கண் மருத்துவமனையில் அனுமதித்த போது இடதுகண் பார்வை கிடைக்க வாய்ப்பில்லை என கூறியுள்ளனர். மாணவி சுடலியின் பெற்றோர், நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் புகார் செய்தனர். அந்த ஆசிரியை மீது நடவடிக்கை எடுக்குமாறும், மாணவிக்கு நிவாரண உதவி கிடைக்க ஏற்பாடு செய்யும்படியும் கோரிக்கைவிடுத்தனர்.

**தினமலர் 25.06.2008**

# கல்வி உரிமையும், நீதித்துறையும்

–டாக்டர். எஸ்.எஸ்.ராஜகோபாலன்

கல்வி உரிமை மசோதா – 2008 அரசியல் சாசனம் பிரிவுகள் – 29 மற்றும் 30ன் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே புரிந்துக் கொள்வது அவசியம். T.M.A பாய் எதிர் கர்நாடக அரசு மற்றும் இது போன்ற வழக்குகளில் நீதிமன்றம் மேற்கூறியுள்ள பிரிவுகளின் வரம்புகளை விவரித்தது.

8வயது வரை கட்டாயக் கல்வி என்பது சுதந்திர போராட்டத்தின் முக்கிய அம்சம் ஆகும். ஆனால் அரசியல் சாசனம் வடிவமைக்கும் பொழுது, இது அடிப்படை உரிமைகளில் ஒன்றாக சேர்க்கப்படவில்லை. இதற்கு காரணம் பேச்சு உரிமைப் போன்று அல்லாமல் கல்வி உரிமை நாட்டிற்கு நிதிச் சுமையை ஏற்படுத்தும் என்று கருதப்பட்டது. எனவே கல்வி உரிமை வழிக்காட்டுதல் நெறி பட்டியலில் சேர்க்கப்பட்டது. ஆனால் கட்டாயக் கல்வி இலக்கை அடைய 10 ஆண்டுகள் நிர்ணயிக்கப்பட்டது.

குழந்தை உரிமை மற்றும் கல்வி ஆர்வலர்கள் நடத்திய நீண்ட கால போராட்டங்களுக்கு, மோகினி ஜெயின் எதிர் கர்நாடகா அரசு (1992) வழக்கின் மூலம் ஓர் தீர்வாக அமைந்தது, கட்டாயக்கல்வி இலக்கை அடைய 10 ஆண்டு காலம் அதிகம் என்பதால் பிரிவு 29ன் படி அவசிய தேவை (கன்னியமாய் வாழ) என்பதால் கல்வி அடிப்படை உரிமை ஆகிவிட்டது என்று நீதி மன்றம் தீர்ப்பு அளித்தது. இதுவே கல்வி உரிமைக்கான மேக்னா கார்ட்டா வாக கருதலாம்.

இந்த தீர்ப்பை எதிர்த்து இந்திய அரசு மேல் முறையீடு செய்தது, நிதி மற்றும் நிர்வாக ரீதியாகவும் அனைத்து மட்டங்களிலும் கல்வி மயமாக்குதல் முடியாத ஒன்று என்ற அடிப்படையில் இத்தீர்ப்பை ஒதுக்கி வைத்தது. தனியார் கல்வி அமைப்புக்களும் அரசு கல்லூரிகளுக்கு ஒத்த கல்விக் கட்டணத்தை வசூலித்து நடத்த இயலாது என்று வாதாடினர்.

புகழ்பெற்ற உன்னி கிருஷ்ணன் எதிர் ஆந்திர அரசு (1993) வழக்கில் மோகினி ஜெயின் வழக்குத் தீர்ப்பு சற்றே திருத்தப்பட்டது. 14 வயது வரை கட்டாய இலவசக் கல்வி அடிப்படை உரிமை ஆக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பானது மோகினி ஜெயினின் தீர்ப்பின் வரம்புகளைக் குறைத்தாலும் கட்டாய இலவசக் கல்விக்கு அரசியல் சாசன திருத்தம் கொண்டு வர நிர்ப்பந்தித்து வந்த கல்வி ஆர்வலர்கள், இந்த தீர்ப்பை ஆதரித்தனர். இதனிடையே தனியார் கல்லூரி நிறுவனங்கள் தொழில் கல்வி தொடர்பான முறையீடுகளைத் தாக்கல் செய்தனர். T.M.A. பாய் எதிர் கர்நாடக அரசு 2002 வழக்கில் 11 பேர் கொண்ட குழு தீர்ப்பு அளித்தது. இஸ்லாமிய ஃபவுண்டேஷன் எதிர் கர்நாடகா 2003 மற்றும் இனாம்தார் எதிர் மஹாராஷ்டிரா அரசு 2005 வழக்குகளில் இரு சிறிய பெஞ்சுகள் பாய் தீர்ப்புக்கு கூடுதல் விளக்கங்கள் அளித்தன. இந்த பெஞ்சுகள் அரசியல் சாசன 29, 30 பிரிவுகளை அழமாய் ஆய்வு செய்தன. சிறுபான்மை கல்வி நிறுவனங்களின் அடிப்படை உரிமைகளை பிரிவின் 30ன் கீழ் உறுதிபடுத்தியதோடு, அதே அரசியல் சாசனம் பிரிவு 26ன் அடிப்படையில் அனைத்து குடி மக்களும் சமம் என்பதால், சிறுபான்மை அல்லாதவர் கல்வி நிறுவனங்கள் கருத்து தெரிவித்தன. இதுவே தனியாரின் வியாபார ரீதியில் செயல்படும் கல்வி நிறுவனங்களுக்கு மேகனா கார்டாவாக அமைந்தது. இந்த தீர்ப்பு தொழில் கல்விக்கு மட்டும் பொருந்தாமல் தனியார் உதவிப்பெறாத கல்வியையும் ஊக்குவித்தது. இதன் விளைவாக மேல் தட்டு மற்றும் இடைத் தட்டு மக்களுக்கு சேவை செய்யும் கட்டண முறை பள்ளிகளும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளும் அருகே அமைந்துள்ளது. உதவி பெறாத பள்ளிகளின் மீது அரசின் கட்டுப்பாடு கேலிக் கூத்தாகிவிட்டது.

மற்றொரு பக்கம் கல்வி மசோதா 2008 ஷரத்து 1 (3)ல் இந்த மசோதா பிரிவு 29, 30ல் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்கு உட்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. பாயின் தீர்ப்பு சிறுபான்மை மற்றும் சிறுபான்மை அல்லாதவர்களுக்கு கல்வி நிறுவனங்கள் உருவாக்கி நிர்வகித்துக் கொள்ள சம உரிமை வழங்கி உள்ளதால் கட்டணம் வசூலிக்கும் கல்வி நிறுவனங்கள் நாட்டின் மூலை முடுக்குகள் எல்லாம் முளைத்துவிட்டது. கல்வி நிறுவனங்களின் உரிமைகளை உயர்த்திப் பிடித்த பெஞ்சுகள், கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயிலும் மாணவர்களின் உரிமையைப் பற்றி கவலை கொள்ளவில்லை. எனவே பிரிவு 30ஐ சிறுபான்மையினரின் விடிவெள்ளி என்று சொல்வது சொற் குற்றம் ஆகும். மழலையர் பள்ளி முதல் மருத்துவக் கல்வி வரை வியாபார ரீதியான கட்டணம் வசூலிக்கும் நிறுவனங்கள் எங்கும் பெருக பாயின் தீர்ப்பு வழிவகுத்தது. அரசின் இந்த போக்கை வரவேற்றது. ஏனெனில் கல்விக்கான நிதிச் சுமை அதிகபடியாக குறைவதினால், இந்தப் போக்கு பொதுப் பள்ளிகளில் தரமான கல்வியைக் கொடுக்க

முடியாமல் போகும் போது சமுதாயத்தில் பிளவுகளை ஏற்படுத்தும்.

சமச்சீர்க் கல்வியை அரசு தழுவ நிர்பந்தம் செய்ய நாகரிக சமூகம் இரு முனைத்தாக்குதல் தொடுத்திட வேண்டும். 6 வயது முதல் 14 வயது வரை உள்ள அனைவருக்கும் கல்வி உறுதி செய்ய வேண்டும். பாய் வழக்கின் தீர்ப்பை முறியடிக்க அரசியல் சாசனத் திருத்தம் கொண்டு வர மேல் முறையீடு செய்ய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது.

**<u>அரசியல் சாசன சாரம்சங்கள்</u>**

**29 (1)** இந்திய எல்லைக்குள் வாழும் வெவ்வேறு பிரத்யேக மொழி கலாச்சாரம் உடைய குடிமக்கள் தங்கள் பாரம்பரியத்தை காத்துக்கொள்ள உரிமை உடையவர்கள்.

**(2)** மதம், இனம், மொழி, ஜாதி இதில் ஏதாவது ஒரு காரணத்தைக் கொண்டு எந்த கல்வி நிறுவனத்திலும் சேர்ந்து படிக்க இடம் மறுக்கப்படக் கூடாது.

**30 (1)** மொழி அல்லது மத அடிப்படையில் சிறுப்பான்மையினர் தங்கள் விருப்படி கல்வி நிறுவனங்களை அமைத்து நிர்வகித்துக் கொள்ளலாம்.

## தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (NCPCR)

யூனிசெப் மற்றும் ஐஎல்ஓ உடன் இணைந்து
"கல்விக்கான உரிமை மற்றும் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு"
பற்றிய தமிழ்நாடு மாநில அளவிலான கலந்துரையாடலில் சுற்றுக்கு விடப்பட்டது

30 மற்றும் 31 அக்டோபர் 2008, சென்னை

**<u>இணைந்த ஏற்பாடு</u> :** குழந்தை உழைப்பு எதிர்ப்பு பிரச்சாரம் – தமிழ்நாடு *(CACL,* குழந்தைகடத்தலுக்கு எதிரான பிரச்சாரம் – தமிழ்நாடு (*CACT*), & கல்வி

# மதிய உணவில் லாயக்கற்ற அரிசி: கணக்குத் தணிக்கைத் துறை கண்டுபிடிப்பு

மனிதர்கள் சாப்பிட லாயக்கற்ற, தரக்குறைவான, கலப்படமான அரிசி, கோதுமை போன்ற உணவு தானியங்கள் தான் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு திட்டத்தில் பரிமாறப்பட்டு வருகிறது. மத்திய கணக்கு தணிக்கைத்துறை, சமீபத்தில் பல மாநிலங்களில் நடத்திய ஆய்வில் இந்த திடுக்கிடும் உண்மை அம்பலம் ஆனது. பல மாநிலங்களில், மதிய உணவு திட்டத்தில் குறைபாடு இருக்கிறது. இதில், ஒரிசா, பஞ்சாப், அரியானா, திரிபுரா ஆகிய நான்கு மாநிலங்களில் மதிய உணவு திட்டம் மிக மேலுமாக அமல்படுத்தப்படுகிறது.

மாணவர்களுக்கு வழங்கும் அரிசி சாதம், கோதுமை மற்றும் உணவு தானியங்கள் கலப்படமாகவும் தரக்குறைவானதாகவும் உள்ளது தணிக்கையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கணக்கில் தில்லு முல்லு செய்வதுடன், கலப்பட பயங்கரத்தில் இந்த மாநிலங்கள் தான் முன்னணியில் உள்ளன. மனிதர்கள் சாப்பிட லாயக்கற்ற இந்த உணவு தானியங்களை சமைத்து மதிய உணவில் அளிக்கப்படுவதை கண்காணிக்கவோ, நடவடிக்கை எடுக்கவோ, மாநில அரசில் தனிப்பிரிவு இல்லை; சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளும் கண்டு கொள்வதில்லை என்றும் தெரியவந்தது.

இந்த மாநிலங்கள் ஒவ்வொன்றிலும், இருபதுக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் சோதனை நடத்தப்பட்டது. உணவு தானியங்களில் முழு அளவில தரம் எதிர்பார்க்க முடியாவிட்டாலும், மனிதர்கள் சாப்பிட லாயக்கானது என்ற அளவுக்கு தரம் பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், அந்த அளவுக்கு கூட தரம் இல்லாதது இந்த மாநிலங்களில் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரிசா, மேற்கு வங்கம், அசாம் மாநிலங்களில், மதிய உணவு திட்டத்தில் கணக்கு தொடர்பான குறைபாடு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. மதிய உணவு திட்டத்தை கண்காணிக்க தனி துறையே இல்லை இந்த மாநிலங்களில்.

ஜார்க்கண்ட், பீகார், உட்பட சில மாநிலங்களிலும் இந்த குறைபாடு காணப்படுகிறது. 'மாநிலங்களில் மதிய உணவு திட்டத்தை கண்காணிக்க தனியாக பிரிவை உருவாக்கி, அதன் அதிகாரிகள் மாதம் ஒரு முறையாவது சோதனை நடத்த வேண்டும். அப்போது தான் கலப்பட தானியங்கள் வழங்குவது நிற்கும்; கணக்கிலும் மோசடி செய்வது குறையும்' என்று, கணக்கு தணிக்கை துறை அதிகாரிகள் கூறினர்.

**–தினமலர், 18.11.2008**

# செயல்வழிக் கற்றல்! தடுமாறும் செயலாக்கம்!

**வே. வசந்திதேவி**

2008 சனவரியில் தமிழகப் பள்ளிக் கல்வி அமைச்சர் திரு. தங்கம் தென்னரசுவும், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் அன்றைய இயக்குநரும், இந்தக் கட்டுரையாளரைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்கச் செயல்வழிக் கற்றல் குறித்த ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது. கட்டுரையாளருடன், கல்வியாளர் முனைவர் எஸ்.எஸ் இராஜகோபாலன், அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைகழகத்தின் பேராசிரியர் முனைவர் ஆர். ஜெயகுமார் ஆகியோர் இணைந்த குழு, சர்வ சிக்ஷா அபியான் இயக்குநர் பரிந்துரைத்த சென்னை மாநகரப் பள்ளிகளில் ஆய்வு மேற் கொண்டது. அதன் அடிப்படையில் தமிழக அரசிடம் மார்ச்சு மாதம் ஓர் அறிக்கை அளிக்கப்பட்டது. ஐந்து மாதங்கள் கழிந்த பின்னும் அறிக்கை வெளியிடப்படாததால், 'கல்வி' என்ற அமைப்பின் மூலம் ஆகஸ்ட் 31ஆம் நாள் அது வெளியிடப்பட்டது.

நான் மட்டும் ஒரு கவிஞனாக இருந்தால், ஐந்து விரல்களின் அற்புதத்தைப் பற்றிக் கவிதை பாடுவேன்... கைகளின் வழி அறிவுக்குக் கல்வி புகட்ட வேண்டும். தங்கள் கைகளைப் பயிற்றுவிக்காதவர்களின்... வாழ்வில் இசையில்லை. அவர்களது அனைத்துத் திறமைகளும் வளர்க்கப்படுவதில்லை. வெறும் புத்தக அறிவு குழந்தைக்கு ஆர்வமிக்கதாக இல்லை. வெறும் வார்த்தைகளால் மூளை களைப்படைந்து விடுகிறது; குழந்தையின் கவனம் சிதறத்தொடங்குகிறது.

**– மகாத்மா காந்தி, 1939**

குழந்தைகளின் ஆரம்பகாலக் கல்வி, செயல்வழியிலேயே (activity based) நடைபெற வேண்டுமென்பது பல காலமாகக் கல்வியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, பெரும்பாலான நாடுகளில் வெற்றிகரமாக இயங்கும் அடிப்படைக் கோட்பாடாகும். மான்டிஸோரி முறை போன்ற புகழ்பெற்ற போதனா முறைகள் இந்தக் கோட்பாட்டையே வலியுறுத்துகின்றன. மகாத்மா காந்தி இதற்கும் ஒரு படி மேலே போய், குழந்தைகள் செயல்வழி மட்டுமின்றி, உழைப்புவழிக் கற்க வேண்டுமென்றார். ஆனால் இந்திய அனுபவத்தில், தொலைநோக்குப் பார்வையுடைய சில கல்வியாளர்களின் கனவில் பிறந்த சிறிய மாற்றுப் பள்ளிகளிலேயே செயல்வழிக் கற்றல் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய வகுப்பறைகள் குழந்தைகளுக்கு ஏற்றவையாக இல்லை; போதனா முறைகள் குழந்தைகளை மையமாகக் கொண்டவையல்ல. அதிலும் பெரும்பாலான குழந்தைகள் முதல் தலைமுறையாகக் கல்வி பயிலும் ஏழ்மையில் மூழ்கிய குடும்பத்துக் குழந்தைகள் என்பதால் அவர்களது தனிப்பட்ட தேவைகளையும் அவர்களது மொழி, சமூகப் பொருளாதாரப் பின்னணியை மனத்தில் கொண்டும் உருவாக்கப்பட்ட போதனா முறைகள் தேவை. வகுப்பறைகள் இறுகிப்போன அதிகாரக் கலாச்சாரத்தில் மூழ்கிக்கிடக்கின்றன. ஆசிரியர் அதிகார பீடத்தில் அமர்ந்து பிரம்பைச் சுழற்றும் சர்வாதிகாரியாகவும் மாணவர்கள் கைகட்டி வாய் புதைக்கும் அடிமைகளாகவும் தோற்றமளிக்கின்றனர். மாணவர் என்ற காலிப் பாத்திரத்தில் விவரங்களைக் கொட்டுவதே ஆசிரியரது பணி. இந்த அவல நிலை காரணமாக ஆர்.கே. நாராயணன் நாடாளுமன்றத்தில் சொன்னதைப் போல் புரியாமை என்ற கொடுமை இந்தியக் கல்வி அமைப்பின் சாபக்கேடாக நிலைபெற்றுள்ளது.

அனைத்துக் குழந்தைகளும் திறம்படக் கற்க வேண்டுமென்றால் இரு தளங்களில் உடனடியான ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும். போதனா முறை குழந்தையை மையமாகக்கொண்டதாக, குழந்தை ஆர்வத்துடன் கற்று, சுயசிந்தனையும் படைப்பாற்றலும் மிக்க வளர்ச்சிபெற உகந்ததாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, அனைத்துக் குழந்தைகளும் கற்றல் திறன்களை அடைய வேண்டும். அதாவது, போதனா முறை (teaching process), திறனடைதல் (learning outcome) இரண்டும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இன்று இந்தியாவில் குழந்தைகள் கற்றல் திறன்களை அடைவதில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளாக நடைபெறும் ASER (Annual Status of Education Report) என்ற தேசிய அளவிலான ஆய்வு, பள்ளிச் சிறார்களின் தாழ்ந்த கற்றல் திறமைகள் குறித்த அதிர்ச்சி அளிக்கும் விவரங்களை வெளியிட்டுள்ளது. இந்த ஆய்வறிக்கைகளின்படி நாடு முழுவதும் உள்ள ஐந்தாம் வகுப்பு மாணவரில் 59 சதவீதத்தினர்தாம் இரண்டாம் வகுப்பிற்குரிய பாடத்தைத் தங்கள் தாய்மொழியில் வாசிக்கும் திறமை பெற்றவர்கள். தமிழ்நாட்டில் 35 சதவீத மாணவர்தாம் இத்திறமை பெற்றவர்கள். கணிதத்தில் தேசிய அளவில் ஐந்தாம் வகுப்பு மாணவரில் 42 சதவீதத்தினர் மட்டுமே எளிய கழித்தல் கணக்குச்

செய்ய இயன்றவர்கள்; தமிழ்நாட்டில் 18 சதவீத மாணவரே இந்தத் திறமை பெற்றவர்கள். கல்வியில் தமிழ்நாடு முன்னணி மாநிலம் என்று கொண்டாடிக்கொண்ட பெருமை காற்றில் பறந்து விட்டது. தமிழ்நாடு தேசிய சராசரியைவிடவும் தாழ்ந்துகிடக்கிறது.

வேதனைக்கும் வெட்கத்திற்கும் உரிய இத்தகைய நிலை மாறக் கல்வியில் உடனடித் தேவைப்படும் மாற்றங்களில் ஒன்றுதான் செயல்வழிக்கற்றல். இதனை ஒரு மாநிலத்தின் பெரும்பாலான குழந்தைகள் கற்கும் அரசு–பொதுப்பள்ளிகளில் நடைமுறைபடுத்தும் முயற்சி சில ஆண்டுகளுக்கு முன் ஆந்திராவில் 'நல்லி கல்லி' என்ற பெயரில் தொடங்கப்பட்டது. ஆனால் விரைவில் கைவிடப்பட்டது. இன்று தமிழ்நாட்டின் அனைத்து அரசு–பஞ்சாயத்து, உதவி பெறும் பள்ளிகளில் செயலில் உள்ளது. ஆங்காங்கே சிறிய அளவில் மட்டும் நடந்துகொண்டிருந்த ஒரு சிறந்த கற்றல் முறையை 70லட்சம் குழந்தைகள் பயனடையும் வண்ணம் பிரம்மிக்கத்தக்க விரிவாக்கம் செய்திருக்கும் தமிழக அரசும் அனைவருக்கும் கல்வி இயக்ககமும் (சர்வசிக்ஷா அபியான்) பாராட்டுதலுக்கு உரியவை.

செயல்வழிக் கற்றல் தமிழ்நாட்டில் முதலில் சென்னை மாநகரப் பள்ளிகளில் அறிமுகம் செய்யப்பட்டு, பின் ஒன்றியத்திற்கு 10 பள்ளிகளுக்கு எனக் கொண்டு செல்லப்பட்டு, 2007–2008 ஆம் ஆண்டில் மாநிலத்தின் அனைத்து அரசு–உதவி பெறும் பள்ளிகளுக்கும் பெரும் விரிவாக்கம் செய்யப்பட்டது. ஆந்திராவில் புகழ்பெற்ற ரிஷி பள்ளத்தாக்குப் பள்ளியினால் நடத்தப்பெறும் கிராமப்புறப் பள்ளிகள் தமிழகத்திற்கு மாதிரியாகக் கொள்ளப்பட்டன.

இம்முறை சில வகுப்பறை உத்திகள், உபகரணங்கள் மூலம் இயங்குகிறது. ஒன்றாம் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்புவரையிலான மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ்க்கொண்டுவரப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பாடப்பிரிவிலும் அடைய வேண்டிய திறன்கள் ஒரு ஏணி வடிவில் அமைக்கப்பட்டு, அதில் பல மைல்கற்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஏணியின் ஒவ்வொரு படிக்கும் உரிய பல செயல்முறைகளும் அவற்றிற்கான குறியீடுகளும் (logos) வகுக்கப்பட்டுள்ளன. அதனைப் புரிந்துகொண்ட குழந்தை ஏணியில் படிப்படியாக ஏறிச் செல்கிறது. வகுப்பறையின் நான்கு சுவரிலும் குழந்தைக்கு எட்டும் உயரத்தில் கரும்பலகை அமைக்கப்பட்டு, ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒன்று முதல் நான்காம் வகுப்புவரையிலான குழந்தைகள் ஒன்றாகக் கற்கிறார்கள்; பல குழுக்களாகப் பிரிந்து வட்டமாக அமர்ந்து, ஆசிரியரின் துணையுடனோ சக மாணவர் துணையுடனோ தாமாகவோ கற்கிறார்கள். ஆசிரியர் குழந்தைகளுக்குச் சமமாகத் தரையில் அமர்ந்து கற்பிக்கிறார். பாடப் புத்தகத்திற்குப் பதிலாகப் படங்களும் சொற்களும் கொண்ட அட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன.

செயல்வழிக் கற்றல் வகுப்பறைச் சூழலில் மிகப் பெரும் மாற்றத்தைக் கொணர்ந்திருக்கிறது. அடக்குமுறையின் வடிவமாக இருந்த வகுப்பறை மறைந்துவிட்டது. இத்தனை நாட்களாகக் குழந்தைகளின் மென்மையான தோள்களின் மீது சுமத்தப்பட்டிருந்த அச்சத்தின் சுமை அகன்றிருக்கிறது. பிரம்பும்கூடக்காணாமல் போய் விட்டது. சலனமற்ற சவத்தன்மை கொண்ட வகுப்பறை, குழந்தைகளின் ஆர்வக் குரல் ஒலிக்கும் உயிரோட்டம் கொண்டதாக மாறியிருக்கிறது. ஆசிரியரின் சர்வாதிகாரமும் சட்டாம்பிள்ளைத் தனமும் மறைந்து விட்டன.

கற்றல் என்பது அச்சுறுத்தல், மூச்சத் திணறவைத்தல், மனப்பாடம் செய்து கொட்டுதல், ஆசிரியரின் பிரம்படிக்கு அடிபணிதல் என்ற புரிதல் மாறி, கற்றல் என்பது குழந்தைகள் பங்கேற்கும் குழந்தைகளை மதிக்கும் இனிய அனுபவம் என்ற புதிய பொருள் பெற்றுள்ளது. குழந்தைகள் அவர்களது இயல்புக்கு மாறாக, நாள் முழுவதும் ஒரு இடத்தில் கட்டிப்போட்டுக் கிடக்கும் நிலை மாறி, சுதந்திரமாக வகுப்பறை முழுவதும் நடமாடுகின்றனர். குழந்தைகள் நேசிக்கும் இடமாக வகுப்பறை மாறியிருக்கிறது. கற்றல் அட்டைகள் நிரம்பிய பெட்டிகள், கூரையிலிருந்தும் சுவர்களிலிருந்தும தொங்கும் குழந்தைகள் வரைந்த படங்கள் என வகுப்பறை வண்ணமயமாக விளங்குகிறது.

ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையில் இருந்த தடுப்புச் சுவர் உடைந்திருக்கிறது. ஆதிக்க பீடமான நாற்காலியிலிருந்து ஆசிரியர்கள் இறங்கிவந்து, தரையில் குழந்தைகளுடன் அமர்ந்திருப்பதே ஒரு ஜனநாயகச் சூழலை உருவாக்கியுள்ளது. காலங்காலமாக வகுப்பறை கட்டிக்காத்துவந்த ஆண்டான்–அடிமை உறவை அடித்து நொறுக்கிவிட்டது. இதுவரை மாணவருக்கு மறுக்கப்பட்ட கரும்பலகை அவர்களுக்குச் சொந்தமாகிவிட்டது. ஒவ்வொரு குழந்தைக்கும் ஒதுக்கப்பட்டுள்ள சிறிய கரும்பலகை மழலை எழுத்துகளால் நிரம்பிவழிகிறது.

ஒவ்வொரு குழந்தைக்குமான வெளியும் தன் வேகத்தில் முன்னேறுவதற்குமான சுதந்திரமும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. குழந்தை கற்றல் ஏணிப்படியில் குறிக்கப்பட்ட செயல்களைச் செய்து முடிப்பது, தன்னுடைய வேகத்தில் ஏணியில் மேலே ஏறுவது, மைல்கற்களைத் தாண்டிச் செல்வது, ஒவ்வொரு கட்டத்திலும் தான் கற்றுக்கொண்டதை மதிப்பிடுவது எனத் தன்னிலை விளக்கம் பெறுவதும் அதனை ஆசிரியரும் சக மாணவரும் சகஜமாக ஏற்றுக்கொள்வதும் வியப்பிற்குரிய மாற்றங்களாகும். மேற்கண்ட மாற்றங்களின் விளைவாகக் குழந்தை தன் சக்தியை உணர்கிறாள். உயிர்த்துடிப்புள்ள, மகிழ்ச்சியான இடமாக வகுப்பறை உருவெடுத்துள்ளது.

செயல்வழிக்கற்றல் பற்றி ஆய்வு மேற்கொண்ட எங்கள் குழு தமிழ்நாட்டின் ஆரம்பக் கல்விக்கு இம்முறை ஒரு வரப்பிரசாதம் என்று கருதுகிறது. பழைய முறைக்கு மாறிப்போய்விடா வண்ணம் இது கட்டிக் காப்பாற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது. அரசின் நிதி நிலை, அரசியல் நிர்ப்பந்தங்கள், அதிகாரிகள் மட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றிற்குச் செயல்வழிக்கற்றல் பலியாகிவிடக் கூடாது. எங்கள் வலிமையான முதல் பரிந்துரை செயல்வழிக் கற்றல் தொடர வேண்டும்; வலிமைப்படுத்தப்பட வேண்டும்; பழமைக்குச் சரிந்து விடாமல் காப்பாற்றப்பட வேண்டும். செயல்வழிக் கற்றல் மேலும் உயிரோட்டம் உள்ளதாகவும் குழந்தைகளுக்குக் கூடுதல் பயனுள்ளதாகவும் சிக்கல் குறைந்ததாகவும் மாற்றப்பட வேண்டும். இதனை மனத்தில் கொண்டு அறிக்கை பல பரிந்துரைகளை அளித்துள்ளது. மிகவும் முக்கியமானவை மட்டும் இங்கு அளிக்கப்படுகின்றன.

**பிரச்சினைகளும் பரிந்துரைகளும்**

செயல்வழிக் கற்றல் மாற்றுப் பள்ளிகளில் சிறிய அளவில், சிறு எண்ணிக்கையிலான குழந்தைகளுக்கு, தீவிரக் கண்காணிப்புடன், அதன் தத்துவார்த்த அடிப்படைகளைப் புரிந்து உள்வாங்கிய, அர்ப்பணங்கொண்ட, பல கட்டப் பயிற்சிபெற்ற ஆசிரியராலேயே வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. அதனை ஒரு மாநிலம் முழுதும் 70 லட்சம் குழந்தைகளுக்கு, குறுகிய காலத்திற்குள் விரிவுபடுத்துவது பெரும் சவாலுக்குரியது. சர்வ சிக்ஷா அபியானின் தலைமை கண்ட கனவு, மாநிலத்தில் பரந்து கிடக்கும் லட்சக்கணக்கான மாணவர்களைச் சென்றடைவதற்குள் ஏற்படும் சிதைவுகளும் திரிபுகளும் இழப்புகளும் ஏராளம்.

அத்துடன், மாநிலத்தின் பள்ளிக் கல்வியில் ஏற்கனெவே இருக்கும் பெரும் பிரச்சினைகளைத் தொடாமல் இந்தப்புரட்சிகரத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது பிரச்சினையின் ஆழத்தை அதிகரித்துள்ளது.

இத்தகைய முன்கூட்டிய பிரச்சினைகளில் மிக முக்கியமானது ஆசிரியர் பற்றாக்குறை. இன்று செயல் வழிக்கற்றல் வேண்டாமென எதிர்க்கும் ஆசிரியர் சங்கங்கள் சுட்டும் முதல் காரணம் இதுதான். இன்று தமிழக ஆரம்பப் பள்ளிகள் அனைத்தும் ஈராசிரியர் பள்ளிகளே. ஐந்து வகுப்புகளுக்கு இரு ஆசிரியர்கள்; பல நாட்கள் பல காரணங்களால் பெரும்பாலும் ஓராசிரியரே அனைத்து வகுப்புகளையும் நடத்துவார். கட்டணம் வசூலிக்கும் எந்தப் பள்ளியாவது ஒரு வகுப்பிற்கு ஒரு ஆசிரியரின்றி நடைபெற இயலுமா ? கதியற்ற ஏழைக் குழந்தைகளுக்குத்தான் இந்நிலை. செயல்வழிக் கற்றல் பற்றி ஒரு தவறான கருத்து நிலவுகிறது. பல வகுப்பு மாணவர் ஒன்றாகக் கற்கும் Multigrade system ஆனதால், ஒரு ஆசிரியரே போதுமானது என்பது பொய்யான வாதம்; அரசு தன் பொறுப்பை உதறும் கண்டனத்திற்குரிய போக்கு. செயல்வழிக் கல்வியில் ஆசிரியருக்கு ஒவ்வொரு மாணவரைப் பற்றியும் அவளது பலம்–பலவீனங்கள் குறித்தும் சரியான கணிப்பு தேவை. ஆகவே இத்திட்டத்திற்குத் தேவைப்படுவது முன்னை விட அதிக ஆசிரியரேயன்றிக் குறைவாக அல்ல. செயல்வழிக் கற்றல் கல்வி நடைபெறும் ரிஷி பள்ளத்தாக்கு முதலான பள்ளிகள் எதிலுமே 30 மாணவருக்கு ஓராசிரியர் என்ற விகிதம் மீறப்படுவதில்லை. ஆகவே எங்கள் குழுவின் மிக அழுத்தமான பரிந்துரை இத்திட்டத்தின் முதல் தேவை வகுப்பிற்கு ஓராசிரியர், ஓர் ஆசிரியருக்கு 30 மாணவருக்கு மிகைப்படாத விகிதம்; பள்ளி நாட்கள் அனைத்திலும் ஆசிரியர் வகுப்பில்தான் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் கண்காணிப்பு. கல்வி மறுக்கப்பட்ட குடும்பக் குழந்தைகளுக்கு இது ஆதாரத் தேவை என்பதையும் இன்று அமெரிக்காவில் கறுப்பு–லத்தீன் இனக் குழந்தைகள் கற்கும் பள்ளிகளில் 20 மாணவருக்கு ஒரு ஆசிரியர் என்ற கோரிக்கை எழுந்துள்ளதையும் அறிக்கை சுட்டிக்காண்பிக்கிறது.

அடுத்து, இத்திட்டம் குழந்தைகள் நான்காம் வகுப்பு முடிக்கும்போது குறிக்கப்பட்ட திறமைகளைப் பெறுவர் என்ற உத்திரவாதம் ஏதும் அளிக்கவில்லை. இம்முறையில் ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய சொந்த வேகத்திலேயே கற்க முடியும் என்றாலும், ஒரு ஆண்டிலோ அல்லது நான்கு ஆண்டுகள் முடியும்போதோ குறிப்பிட்ட கற்றல் அடைவுகளை

அனைத்துக் குழந்தைகளும் அடையச்செய்ய வேண்டும். மூன்றாம், நான்காம் வகுப்புகளிலுள்ள குழந்தைகள் சுயமாகக் கற்கும் திறமைகளை அடைந்துவிட வேண்டுமென்று திட்டம் எதிர்பார்க்கிறது. நாங்கள் ஆய்வுசெய்த சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் இம்முறை நான்காண்டுகளாக நடைபெறுகிறது. அனைத்துப் பள்ளிகளிலும் குழந்தைகளின் திறமைகளைத் தேர்வுசெய்தோம். அதிர்ச்சியே காத்திருந்தது. மூன்று அல்லது நான்காம் வகுப்பு மாணவர்களில் பாதிக்குக் குறைவாகத் தான் ஒரு எளிய கதை வாசிக்கும் திறமை பெற்றவர்கள் 25 சதவீத மாணவர் வார்த்தைகள் வாசிப்பதைத் தாண்டி, அடுத்த படிக்கு முன்னேற வில்லை. கணிதத்திலும் இதே நிலைதான். தாழ்வுற்ற இந்தத் திறமை நிலைக்குச் செயல்வழிக் கற்றல்தான் காரணம் என்று சொல்லவில்லை. நிலைமை குறித்த baseline study, மாற்றத்திற்கு முந்தைய நிலை குறித்த ஆய்வு ஏதும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் செயல்வழிக் கற்றல், கற்றல் திறமை அடைவுகளில் முன்னேற்றம் எதையும் உண்டாக்கியிருப்பதாகத் தெரியவில்லை. இந்நிலை நீடிக்குமென்றால் சமுதாயத்தின் பெரும்பாலாரான பொதுப் பள்ளி மாணவருக்குப் பெரும் அநீதி இழைக்கப்படுகிறது என்றுதான் கூற வேண்டும். தமிழகத்தின் பள்ளிக்கல்வி பெருமளவு தனியார் மயமாக்கப்பட்டதின் விளைவாக அரசுப்பள்ளிகள் பெரும் புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதற்கு இதுவும் ஒரு அறிகுறி.

இதை ஒட்டி எழுந்திருக்கும் ஒரு விமர்சனத்தை இங்கே குறிப்பிட வேண்டும். செயல்வழிக் கற்றல் கல்வி அரசு–உதவி பெறும் பள்ளிகளில் மட்டுமே ஏன் நடைபெறுகிறது? மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் ஏன் அறிமுகப்படுத்தப்படவில்லை? வசதிபடைத்த குழந்தைகள் ஏன் இந்தத் திட்டத்திலிருந்து விடுபட்டுள்ளனர்? பெரும் பயனளிக்கும் சிறந்த திட்டமென்றால் அப்பள்ளிகள் இதனை அரசுப் பள்ளிகளுக்கு முன்பே நடைமுறைப்படுத்தியிருப்பார்களே! இலவசப் பள்ளிகளில் மட்டுமே இத்திட்டம் என்பது ஏற்கெனவே இருவகைப் பள்ளிகளுக்கும் உள்ள இடைவெளியை இன்னும் அதிகரிக்குமோ? வசதியற்ற குழந்தைகள் போட்டிக் களத்தில் முன்னைவிட வலுவிழந்தவர்களாக ஓரங்கட்டி ஒதுக்கப்படும் நிலை ஏற்படுமோ! நிலவும் ஏற்றத்தாழ்வுகளை மேலும் மூர்க்கமடையச் செய்யுமோ? பலஆசிரியர் சங்கங்கள் இத்திட்டம் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கும் கொண்டுவரப்பட வேண்டுமென்று கோரிக்கைவைத்துள்ளனர். அதிலும், சமச்சீர் கல்வி குறித்துப் பேசிவரும் தமிழக அரசு முதல் கட்டமாகத் திட்டத்தை அனைவருக்கும் பொதுவானதாக ஆக்கட்டும்.

ஒவ்வொரு வகுப்பிலும் மெதுவாகக் கற்கும் குழந்தைகள், ஒரு கட்டத்தில் தேக்கமடைந்திருப் போர் கணிசமான எண்ணிக்கையிலுள்ளனர். இவர்கள் நிலை மிகவும் கவலைக்கிடமானது. அதிலும் பெரும்பாலான குழந்தைகள் வீடுகளில் உதவிபெற இயலாதவரானதால், மெதுவாகக் கற்கும் குழந்தைகளுக்கும் பின்தங்கிய குழந்தைகளுக்கும் ஒரு கட்டத்தில் நீண்ட நாட்கள் தேங்கிவிடும் குழந்தைகளுக்கும் திருத்தச் செயல்பாடுகள் (Remedial Programme), கூடுதலாகச் சில வேறுபட்ட பயிற்சிகள் மூலம் அளிக்கப்பட வேண்டும். இதற்கான எந்த ஏற்பாடும் இப்பொழுது செய்யப்படவில்லை. திட்டத்தின் மிகப் பெரும் பலவீனம் இது. செயல்வழிக் கற்றல் திட்டத்தினுள்ளேயே திருத்தச் செயல்பாடுகள் இணைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவது சரியல்ல.

கவலைக்குரிய மற்றொரு அம்சம் ஆசிரியரின் சுதந்திரம் தன் வகுப்பறையை வடிவமைத்துக் கொள்ளும் உரிமை, புதிய போதனா முறைகளை மாணவருக்கு ஏற்றவண்ணம் உருவாக்கும் பெருமை இவற்றிற்கெல்லாம் இத்திட்டத்தில் இடமிருப்பதாகத் தெரியவில்லை. இக்குறைகளுக்கெல்லாம் செயல்வழிக் கற்றல்தான் காரணம் என்று சொல்ல இயலாது. இந்தியக் கல்வியின் இரு பெரும் சீர்கேடுகள், சர்வநாசினிகள் வணிகமயமான தனியார் கல்வியும், அதிகாரமயமாக்கப்பட்ட பொதுக் கல்வியும்தான் இரண்டாவதன் காரணமாக ஆசிரியர் ஒரு அதிகார அமைப்பின் கடைநிலை ஊழியராக மாற்றப்பட்டிருக்கிறார். தனது வகுப்பறையைத் தனக்கே உரிய பெருமைமிகு படைப்புக்களமாக ஆசிரியர் கருத வேண்டும்; அதற்குரிய சுதந்திரம் அவருக்கு அளிக்கப்பட வேண்டும். இந்தச் சுதந்திரத்தின் மறுபக்கம் ஆசிரியரின் கடப்பாடும், தன் மாணவருக்கான பொறுப்புணர்வும். ஆசிரியருக்கு இத்தகைய மதிப்பும் மரியாதையும் மறுக்கப் பட்டதன் விளைவு சமுதாயத்திலும் ஆசிரியருக்கு இருந்த ஏற்றம் இன்று மறைந்துவிட்டது. ஆசிரியருக்குத் தன் மாணவரின் பெற்றோருடனும் அவர் வழியே சுற்றிலுமுள்ள சமுதாயத்துடனும் இருக்க வேண்டிய உயிர் பந்தங்கள் அறுபட்டன; அல்லது உருவாகவே இல்லை.

செயல்வழிக் கற்றல் இந்த வேதனைமிகு போக்கினை இன்னும் தீவிரப்படுத்தி, அதிகார வர்க்கத்தின் கைப்பாவையாக ஆசிரியரை மாற்றியிருக்கிறதோ

என்ற அச்சம் ஏற்படுகிறது. தமிழ்நாட்டின் செயல்வழிக் கற்றல் ஒரு நுணுக்க நிர்வாக அமைப்பு (micro-managed system). இத்திட்டத்தின் ஒவ்வொரு ஏணியின் ஒவ்வொரு மைல்கல்லும் ஒவ்வொரு மைல்கல்லின் ஒவ்வொரு படியும் ஒவ்வொரு படியின் ஒவ்வொரு செயல்பாடும் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று இறுக்கமாக வரையறுக்கப்பட்டு வலியுறுத்தப்படுகிறது. கற்பித்தலின் ஜீவனையே இது கொன்றுவிடுகிறதோ என்ற ஐயம் எழுகிறது. கண்காணிப்பு அமைப்பின் ஒவ்வொரு மட்டத்து அதிகாரியும் குறிப்பிட்ட செயல்பாடுகள் முடிக்கப்பட வேண்டுமென்பதையே இலக்காக வலியுறுத்துவதாகத் தோன்றுகிறது.

இத்தகு அதிகார அமைப்பின் காரணமாக ஆசிரியர் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் தங்கள் விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் குறித்துப் பேசவே அஞ்சுகிறார்கள். நாங்கள் சென்ற பள்ளிகளில் எந்தப் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கும் ஆசிரியர் அஞ்சியதை நன்கு உணர முடிந்தது. பள்ளியில் பல மணி நேரம் செலவழித்த பின், மீண்டும் மீண்டும் நாங்கள் வலியுறுத்திக் கேட்டு, விமர்சித்த ஆசிரியர் பெயரோ பள்ளியின் பெயரோ வெளியில் சொல்லப்படாது என்ற உத்திரவாதத்தைப் பலமுறை அளித்த பிறகே வாய் திறந்து குறைகூறத் தொடங்கினர். வேறு பணிக்காக மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பல ஆசிரியரை ஒருமுறை சந்திக்க நேர்ந்தபோது, எடுத்துக் கொண்ட பொருளையே விட்டுவிட்டு, இரண்டு மணி நேரம் செயல்வழிக் கற்றல் குறித்த ஆதங்கங்களை ஆசிரியர் கொட்டுவதைக் கேட்க நேர்ந்தது. உங்களது கவலைகளையும் ஆலோசனைகளையும் தலைமை அதிகாரிகளுக்குத் தெரிவித்தீர்களா என்று கேட்டதற்குக் கிடைத்த பதில்: “கூட்டங்களில் எங்களை வாய் திறக்க அதிகாரிகள் அனுமதிப்பதில்லை. செயல்வழிக் கற்றல் குறித்துப் புகழ வேண்டுமென்றால் பேசுங்கள்; இல்லாவிட்டால் சும்மா இருங்கள்” என்று அதிகாரிகள் மிரட்டுவதாகக் கூறினர். இத்தகைய ஆதங்கங்களைக் கடந்த சில மாதங்களில் பலமுறை கேட்டிருக்கிறோம். இந்நிலைக்கு ஆசிரியரும் கல்வியும் தள்ளப்பட்டிருக்கும் அவலம் குறித்து விமர்சிக்கத் தேவையில்லையென்று நினைக்கிறேன்.

திட்டத்தின் வடிவமைப்பில் பல குறைகள் உள்ளன. இவை அனைத்தும் ஆசிரியருடன் கலந்து ஆலோசித்துக் திருத்திக்கொள்ளக்கூடிய குறைகள்தாம். அவற்றில் ஒரு சில:

செயல்வழிக் கற்றல் ஏணி என்பது இம்முறையின் மிக முக்கிய வடிவமைப்பு. சொல்லப்போனால் ஏணிப்படியின் சர்வாதிகாரம் இன்று வகுப்பறைகளில் கோலோச்சுகிறது. ஆனால் ஏணி–திறன் சமன்பாடு தெளிவாகப் புலப்பட வில்லை. ஏணியின் எந்தப்படியை முடித்தால் குழந்தை கற்றுக்கொண்ட ஒரு திறமையைக் குறிக்கிறதா அல்லது குறிப்பிட்ட சில செயல்பாடுகள் குறிக்கின்றதா என்பதும் தெளிவாக இல்லை. ஏணிப்படி முறை மிகவும் சிக்கலானது; அதனைக் குழந்தைகள் புரிந்துகொள்ள மூன்று மாத காலமாயிற்று என ஆசிரியர்கள் கூறினர். விலை மதிப்பற்ற மூன்று மாதங்களை இதற்குச் செலவிட வேண்டுமா? ஏணியின் படிகள் குறைக்கப்பட வேண்டும் அல்லது சீரமைக்கப்பட வேண்டும்.

பாடப் புத்தகத்திற்குப் பதில் படங்களும் சொற்களும் கொண்ட வண்ண அட்டைகள் பயன்படுத்தப் படுகின்றன. அவை மாணவர் தாமாகக் கற்கும் உபகரணங்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் பாடப்புத்தகம் அப்படியே அட்டைகளாக மாற்றப்பட்டிருப்பதாக ஆசிரியர்கள் சொல்கின்றனர். அட்டைகளை உருவாக்க வேறு அணுகுமுறை பயன்படுத்தப்பட வேண்டும். அத்துடன் பாடப் புத்தகங்களும் குழந்தைகளுக்கு வழங்கப் படுகின்றன. பெரும் குழப்பம் நிலவுகின்றது. பயன்படுத்தும் குழந்தை எந்தத் திறமை அடையும் என்று சொல்ல இயலவில்லை ஏணியின் ஒரு கட்டம் உபகரணங்கள் dynamic material ஆக இல்லை; static material ஆக இருக்கின்றன. இதனால், அட்டைகளைப் பல வகைகளில் பயன்படுத்திக் கிடைக்கக்கூடிய நன்மையை இழக்க நேரிடுகிறது.

குழந்தைகள் குழுக்களாகப் பிரிந்து, வட்டமாக அமர்ந்து கற்பது இத்திட்டத்தின் புதுமைகளில் ஒன்று. குழுவழிக் கற்றலில் குழந்தைகள் குழுக்களில் இணைந்து, பகிர்ந்து, விளையாட்டுகள் போன்றவை மூலம் கற்பது அவர்கள் ஆர்வத்துடன் எளிதாகக் கற்க ஏதுவாகிறது. ஆனால் இன்றைய செயல்வழிக் கற்றலில் குழந்தைகள் வட்டமாக உட்கார்ந்து, ஆனால் அவரவர் தனித்தனியாகத் தங்கள் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றனரே அன்றி இணைந்து கற்பதில்லை. இதுவல்ல குழுவழிக்கற்றல்.

சக மாணவரிடமிருந்து கற்றல் ஆசிரியரிடமிருந்து கற்பதைக் காட்டிலும், குழந்தைகள் ஆர்வமுடன், அச்சமின்றிக் கற்க உதவுவதாகச் சொல்லப் படுகிறது. விரைவில் கற்கும் குழந்தைகள் மெதுவாகக் கற்கும் குழந்தைகளுக்குக் கற்றுத்தரல் வேண்டும். இதன் மூலம் ஆசிரியரின் சுமையும் குறையுமென்று சொல்லப்படுகிறது. ஆனால்

இவ்வகுப்புகளில் அத்தகைய கற்றல் நடைபெறுவதாகத் தோன்றவில்லை. முன்னேறிய குழந்தைகள் பின்தங்கியோருக்குக் கற்றுத்தரும் திறமையும் பொறுமையும் கொண்டவரல்ல.

இவை போன்ற திட்டங்களை வடிவமைப்பதிலும் செயல்படுத்துவதிலும் ஏராளமான குறைகளும் குழப்பங்களும் உள்ளன. ஒரு பிரம்மாண்ட திட்டத்தை நிறைவேற்றுவதில் தொடக்கக் காலத்தில் எதிர்பார்க்கக் கூடிய பிரச்சினைகள்தாம் இவை. விவரங்களில் சைத்தான் ஒளிந்து கொண்டிருக்கிறது (Devil is in the detail) என்று சொல்வார்கள். நுணுக்கங்களில் கவனம் செலுத்தாவிட்டால் திட்டமே நொறுங்கிவிடும்.

இன்று திட்டத்தை ஆதரித்தும் எதிர்த்தும் பல குரல்கள் எழுந்துள்ளன. ஒரு ஆரோக்கியமான விவாதம் தேவை. பெரும்பாலான ஆசிரியர் சங்கங்கள் செயல் வழிக்கல்வியைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டாலும், ஆசிரியர் பற்றாக்குறை போன்ற அதன் அடிப்படைத் தேவைகளைத் தீர்க்காமல் திட்டத்தைத் தொடரக் கூடாது என்கின்றன. சங்கங்கள் பொத்தாம் பொதுவாக எதிர்க்காமல் திட்டத்தின் அடிப்படைகளையும் நுணுக்கங்களையும் குறித்து, அறிவுபூர்வமாக, அனுபவபூர்வமாகப் பரந்த ஆய்வும் விவாதமும் நடத்தி, தங்கள் ஆலோசனைகளை ஏற்க அரசை வற்புறுத்த வேண்டும்.

திறந்த மனத்துடன், விமர்சனங்களை ஏற்று, தேவையான மாற்றங்களைச் செய்யும் மனப்போக்கும் முதிர்ச்சியும் கல்வித் துறைக்குத் தேவை. மேலிருந்து திணிக்கும் திட்டங்கள் வெற்றிபெற வாய்ப்பில்லை. அனைத்து வகைப்பட்ட பள்ளிகளிலும் இத்திட்டம் கொண்டுவரப்பட வேண்டும். பெரும் ஏற்றத்தாழ்வுகள் மிகுந்த அமைப்பில், வசதியற்ற குழந்தைகளைக் கொடுமையான புறக்கணிப்புக்கு உள்ளாக்கியிருக்கும் அமைப்பில், இதன் மூலம் இடைவெளிகள் இன்னும் அதிகரிக்கும் என்ற அச்சம் தவிர்க்கப்பட வேண்டும். நீண்ட காலமாகக் கல்வி அமைப்பைச் சீரழித்துக் கொண்டிருக்கும் பல்வகைப் பள்ளிகள், ஆசிரியர் பற்றாக்குறை, சமுதாயப் பங்கேற்பின்மை போன்ற பிரச்சினைகளைத் தொடாமல் போதனாமுறை மாற்றத்தினால் மட்டும் முன்னேற்றம் காண இயலாது.

அனைத்திற்கும் மேலாக போதனாமுறையும் வகுப்பறைக் கலாச்சாரமும் ஆசிரியரின் சுதந்திரத்தில், திறமையில், படைப்பாற்றலில், அனுபவ முதிர்ச்சியில், பொறுப்புணர்வில் வேர் கொண்டவை. இவை அனைத்தும் மதிக்கப்படும் சூழலில் ஆசிரியர் தம் வகுப்பறை தமக்கே உரியதெனச் சொந்தம் கொண்டாடித் தனது மாணவரின் திறமையில் தன் வாழ்வின் அர்த்தத்தைக் காண்பார். அந்தச் சூழலை உருவாக்கக் கல்வித் துறை முயல வேண்டும்.

இவை அனைத்தும் மேற்கொள்ளப்பட்டால், தமிழ் நாட்டின் அனைத்துக் குழந்தைகளும் ஆர்வத்துடன் கற்று, கற்றல் திறன்களை அடைவார்கள். அனைத்துப் பயனாளிகளும் பங்கும் பொறுப்பும் ஏற்கும் அற்புதமான மாற்றம் உருவாகும் என்று நம்பலாம்.

**–காலச்சுவடு . அக்டோபர் 2008**

## பள்ளிக் கல்வியை அடிப்படை உரிமையாக்கும் சட்ட மசோதா : மத்திய அமைச்சரவை ஒப்புதல்

6 வயது முதல் 14 வயது வரையிலான சிறுவர்களுக்கு பள்ளிக்கல்வியை கட்டாய, அடிப்படை உரிமையாக்கும் சட்ட வரைவிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தலைநகர் டில்லியில் வியாழக்கிழமை மாலை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் நாடாளுமன்றம் மேற்கொண்ட 86வது சட்ட திருத்தத்தின்படி, பள்ளிக் கல்வியை இலவசமாகவும், கட்டாயமாகவும் பெறுவதை அடிப்படை உரிமையாக்கும் சட்ட வரைவு பற்றி பரிசீலிக்கப்பட்டது.

இக்கூட்டம் பற்றி வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்த மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம், கல்வியை அடிப்படை உரிமையாக்கும் சட்ட மசோதாவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்த மாதம் டில்லி மாநில சட்டசபைத் தேர்தல் நடைபெற உள்ளதால் அதன் விவரங்களை வெளியிட முடியாத நிலை உள்ளது. சட்ட வரைவு தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பட்டு, அதன் ஒப்புதல் கிடைத்த பிறகு அது குறித்த விவரங்கள் வெளியிடப்படும். இச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேறிய பின்னர் அதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மத்திய, மாநில அரசுகளைச் சார்ந்தது என்றார் ப.சிதம்பரம்.

**– தமிழ்சுடர், 31.10.2008**

# கிராமக்கல்விக் குழு

கல்விச் செயல்பாடுகளில் சமுதாயத்தை முழுமையாக ஈடுபடுத்தி, சமுதாயத்தின் சொத்தாகப் பள்ளியை மாற்றும் முயற்சியே கிராமக் கல்விக் குழுவின் செயல்பாடாகும்.

**அ.அமைப்பு**

| | | |
|---|---|---|
| • ஊராட்சி மன்ற / பேரூராட்சி / நகரமன்ற தலைவர் / உறுப்பினர் | | – தலைவர் |
| • பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர்/ ஊராட்சி மன்ற துணைத்தலைவர் | | – துணைத்தலைவர் |
| • பள்ளியின் தலைமை ஆசிரியர் | 1 | – உறுப்பினர்–செயலர் |
| • ஆதிதிராவிட/பழங்குடியின உறுப்பினர் | 1 | – உறுப்பினர் |
| • மகளிர் சுய உதவிக்குழு ஊக்குநர் | 1 | – உறுப்பினர் |
| • ஆதிதிராவிட/பழங்குடியின மகளிர் சுய உதவிக்குழு ஊக்குநர் | 1 | – உறுப்பினர் |
| • மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி | 1 | – உறுப்பினர் |
| • கிராம நிர்வாக அலுவலர் | 1 | – உறுப்பினர் |
| • தன்னார்வத் தொண்டு நிறுவனப் பிரதிநிதி | 1 | – உறுப்பினர் |
| • ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டப் பிரதிநிதி | 1 | – உறுப்பினர் |
| • சுகாதாரப் பணியாளர் | 1 | – உறுப்பினர் |
| • பள்ளி ஆசிரியை | 1 | – உறுப்பினர் |
| • பகுதியில் உள்ள சிறந்த கல்வியாளர் | 1 | – உறுப்பினர் |
| • இளைஞர் மன்ற தலைவர் | 1 | – உறுப்பினர் |
| • நன்கொடை அளிக்கக்கூடிய பிரமுகர்கள் | 2 | – உறுப்பினர் |

**ஆ.விதிமுறைகள்**

❖ கிராமக்கல்விக் குழுவின் பெயரில் வங்கியில் தலைவர் மற்றும் செயலர் கூட்டாக இயக்கக்கூடிய கணக்கு தொடங்கப்பட வேண்டும். உம். “நல்லாமூர் தொடக்கப் பள்ளி கிராமக்கல்விக் குழு” பெயரில் வங்கியில் சேமிப்புக் கணக்கு துவக்கி இதனை தலைவர் மற்றும் உறுப்பினர்–செயலராக விளங்கும், தலைமை ஆசிரியர் கூட்டாக இயக்க வேண்டும்.

❖ தலைவர் இல்லாதபோது (கிராமக் கல்விக் குழுவின்) துணைத்தலைவர், தலைவர் பதவியை வகிப்பார்.

❖ கிராமக்கல்விக் குழுவின் கூட்டம் பள்ளியிலேயே மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை பள்ளியின் வேலை நேரத்திற்குப் பிறகு மாதம் ஒரு முறை கூட்டப்பட வேண்டும்.

❖ ஒரே நேரத்தில் நகர/வார்டில் ஒரு துவக்கப் பள்ளியும், உயர்/ மேல்நிலைப்பள்ளியும் இருந்தால், ஒவ்வொரு பள்ளிக்கும் தனித்தனியாக கிராமக்கல்விக்குழு இயங்கும் இரண்டிற்கும் ஊராட்சி மன்றத் தலைவர்/ நகரமன்ற உறுப்பினர் தலைவராக இருந்தாலும் உறுப்பினர்களைப் பொறுத்த மட்டில் ஏதேனும் ஒரு பள்ளியில் மட்டுமே உறுப்பினராக இருக்க வேண்டும்.

❖ பள்ளியின் அடிப்படைக் கட்டமைப்புத் தேவைகளை கிராமக்கல்விக்குழு தீர்மானம் செய்த பிறகு குறைதீர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

❖ கிராமக் கல்விக் குழுவின் துணைத்தலைவர் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவராக இருப்பினும் கண்டிப்பாக தற்போது பள்ளியில் பயிலும் மாணவரின் பெற்றோராக இருப்பது அவசியம். பெற்றோர் அல்லாத நபர்களை துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்க இயலாது.

❖ கிராமக்கல்விக் குழுவில் குறைந்தபட்சம் 30 சதவீதம் பெண்கள் இடம்பெற வேண்டும்.

❖ நகராட்சிகளைப் பொறுத்தமட்டில் பல பள்ளிகள் இயங்கும் காரணத்தால் சம்பந்தப்பட்ட நகர் மன்ற உறுப்பினர் பள்ளி கல்விக் குழுவின் தலைவராகச் செயல்படுவார்.

❖ நகரமன்றத் தலைவர் ஏதேனும் ஒரு பள்ளிக்குத் தலைவராகச் செயல்படுவார்.

❖ தீர்மானத்திற்கு மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

**இ.கூட்டங்கள் நடத்தப்பட வேண்டிய முறை**

1. அனைவரும் வட்டமாக தரையில் சரிசமமாக உட்கார வேண்டும்.
2. இறைவணக்கம் / தமிழ்த்தாய் வாழ்த்து
3. அனைவருக்கும் கல்வி இயக்க உறுதிமொழி எடுத்தல்
4. வருகைப் பதிவேட்டில் கையெழுத்து
5. கடந்த கூட்டத்தில் இயற்றிய தீர்மான வகைகள் மீது எடுத்த நடவடிக்கை குறித்து விளக்கம் / விவாதம் ஏற்புத் தீர்மானம் இயற்றல், வரவு–செலவு கணக்குகள் வாசித்தல்.
6. இக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் வாசித்தல், ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு விவாதித்துத் தீர்மானம் இயற்றுதல்.
7. உறுப்பினர்களால் கொண்டு வரப்படும் இதர பொருட்கள் மீதான விவாதம், தீர்மானம் இயற்றுதல்.
8. கூட்டம் நிறைவுறும் முன் பொருட்கள் மீதான தீர்மானங்களைத் தெளிவாக எழுதிய பின், அவை ஒவ்வொன்றாக வாசிக்கப்பட்டு அனைத்து உறுப்பினர்களின் கையொப்பம் பெறுதல்.
9. அடுத்த கூட்டத்தின் இடம், தேதி, நேரம், அறிவித்து நன்றி கூறிய பிறகு கூட்டத்தை நிறைவு செய்யலாம்.

**ஈ.குழு உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை**

1. குறித்த நேரத்தில் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும்.
2. கூட்டம்முடியும வரை இருந்து தீர்மான புத்தகத்தில் கையெழுத்து இட்ட பிறகு செல்லுதல் வேண்டும்.
3. கூட்ட நிகழ்வுகளிலும், விவாதங்களிலும் முழுமையாக ஆர்வத்துடன் பங்கேற்றல் வேண்டும்.
4. மற்றவர்கள் மனம் புண்படாத வகையில் நடந்து கொள்ளுதல்வேண்டும்.
5. மற்றவர்கள் பேசும்போது குறுக்கே பேசாமல், மற்றவர்கள் பேசிய பிறகு அமைதியாக தங்களுடைய கருத்துக்களைக் கூறுதல் வேண்டும்.
6. மற்றவர்கள் கருத்துகளுக்கு மதிப்பளித்துக் கூர்ந்து கவனித்தல் வேண்டும்.
7. உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது சுமூகமாகப்பேசித் தீர்க்கப்படல் வேண்டும்.
8. குழுச் செயல்பாடுகள் ஒளிவு மறைவின்றி அமைய வேண்டும். குழு கணக்குகளைத் தெளிவாக வாசித்து, சந்தேகங்களுக்கு இடமளிக்காமல் இருக்க வேண்டும்.
9. பெண்கள் மற்றும் ஆதிதிராவிட / பழங்குடியின உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பளித்து அவர்களுடைய கருத்துகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
10. சந்தேகங்கள் இருப்பின் உடனடியாகக் கேட்டு அவற்றை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.


**உ. கிராமக் கல்விக் குழு முதலில் செய்ய வேண்டியது.**

1. வங்கிக் கணக்கு துவங்குதல் பற்றியும் எவர் அதை இயக்குவார்கள் என்பது பற்றியும் தீர்மானம் நிறைவேற்றல்.
2. கிராமக் கல்விப் பதிவேட்டைத் தயாரிப்பது பற்றியும், இப்பள்ளிக்கு உரிய குக்கிராமங்கள் /வார்டுகள் வரையறை செய்து அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வி அளிப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
3. வீடு வீடாக குழந்தைகள் கணக்கெடுப்பு செய்தவற்கு சுய உதவிக்குழு உறுப்பினர்கள் இளைஞர் மன்றத்தினர் ஆகியோரைத் தேர்வு செய்து 2 அல்லது மூன்று குழுவாகப் பிரித்து புள்ளி விவரங்களை எடுக்க அவர்களுக்குப் பயிற்சி அளித்துப் பணியை மேற்கொள்ளத் தீர்மானித்தல்.
4. பள்ளி மேம்பாட்டிற்கு என்ன தேவை எனப்ப ட்டியலிட்டு முன்னுரிமைப் படுத்ததுதல்.
5. புதிய பள்ளிக்கட்டிடத்தையோ, மாற்றுப் பள்ளிகளையோ கோருதல் (உம். கல்லுடைக்கும் தொழிலாளர்கள் குழந்தைகளுக்கு)
6. ஆசிரியர் பற்றாக்குறையை ஆய்வு செய்து கிராம மக்கள் பங்கேற்பு மூலமாக கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் செய்வது குறித்து ஆலோசித்தல்.
7. கிராமக் கல்விக் குழுவின் ஆண்டுத் திட்டத்தைத் தீட்டுதல்.

**ஊ. செயலரின் கடமைகள்**

* கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தல்
* கடைசிக் கூட்டத்தின் நிகழ்வுகளை வாசித்தல்
* வரவு–செலவு பதிவேடுகளை வாசித்தல், பராமரித்தல்
* கூட்டத்தில் அனைவரின் பார்வைக்கும் குழு கணக்குகளை முன் வைத்தல்.
* நிர்வாக மற்றும் பொதுக்குழு கூட்டம் கூட்டுதல்
* தீர்மானங்களைத் தெளிவாகக் கூட்டம் நடைபெறும்போதே எழுதுதல்.
* கூட்டம் முடியும் முன்பு அனைத்துப் பொருட்களின் மீதான தீர்மானங்களை வாசித்து அனைவரின் கையொப்பத்தைப் பெறுதல்.

**எ. கிராமக் கல்விக் குழு பணிகள்:**




- தணிக்கைப் பதிவேடுகளைச் சமர்ப்பித்தல்
- நிதி ஆதாரம் பெருக்குதல்
- சமுதாயத்தோடு இணைத்து தலைவருக்கு ஆலோசனை வழங்குதல்
- பள்ளியின் ஆண்டுத் திட்டம் தயாரித்தல்
- பள்ளியின் தேவைகளைக் கண்டறிந்து கூட்டத்தின் போது தெரிவித்தல்
- சிறப்பு நோக்குக் குழுவின் மூலம் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டியவர்களுக்கு உதவி செய்தல் (ஆதி திராவிட/பழங்குடியினர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்)
- புதிய பள்ளி, மாற்றுப்பள்ளி மற்றும் நிலை உயர்த்த வேண்டிய பள்ளிகளைத் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- கிராமக் கல்விக் குழுவின் ஆண்டு அறிக்கை தயாரித்தல் (ம) ஆண்டுக் கணக்கை தணிக்கை செய்து அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்குதல்.

**ஏ. தலைவரின் கடமைகள்**

- பள்ளித் தந்தை போன்று பொறுமையாகவும் முன் மாதிரியாகவும் நடந்து கொள்ளுதல்.
- கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல்
- அவ்வப்பொழுது ஏற்படும் பிரச்சனைகளுக்கு சுமுகமான தீர்வு காணுதல்
- பள்ளியின் வளர்ச்சிக்காக எடுக்கப்படும் முடிவுகளைச் செயலாற்றிட உதவி செய்தல்
- தீர்மானங்களை நிறைவேற்றுதல்
- அனைத்துத் துறை அரசு அலுவலர்களுக்கும் கிராமக் கல்விக் குழுவுக்கும் இடையே இணைப்பினை ஏறபடுத்துதல்.

- ஊராட்சி / நகராட்சியின் சிந்தனைகளை கிராமக் கல்விக்குழுக் கூட்டத்தில் பிரதிபலித்தல்.

**ஐ. கிராமக் கல்விக் குழுவால் பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள்**

- ஒளிவு மறைவில்லாத நிர்வாகத்தை ஏற்படுத்த கிராமக் கல்வி குழு கீழ்க்கண்ட பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும். இப்பதிவேடுகளை தலைமை ஆசிரியர்கள் பள்ளியில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். இப்பதிவேடுகளை வேறு எங்கும் எடுத்துச் செல்லக் கூடாது.
- தீர்மானப் பதிவேடு (Minute Book)
- வங்கிக் கணக்குப் புத்தகம் (Pass Book)
- காசோலைப் புத்தகம் (Cheque Book)
- ரொக்கப் புத்தகம் (Cash Book)
- பொதுப் பேரேடு (General Ledger)
- கடிதக் கோப்பு (Correspondence File)
- கிராமக் கல்விப் பதிவேடு (Village Education Register)
- ஆண்டுக் கணக்கு அறிக்கை
- பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் நியமிக்கப்படும் ஆசிரியர்கள் பதிவேடு
- நன்கொடை ரசீதுப் புத்தகம்

**ஒ. கிராமக் கல்விக் குழுவின் நிதியினைக் கையாளுதல்**

- கிராமக் கல்விக் குழுவில் இயற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் மட்டுமே நிதியைப் பயன்படுத்துதல் வேண்டும்.
- கிராமக் கல்விக் குழு கூட்டத்தில் தீர்மானங்கள் இயற்றிய பிறகு வாசிக்கப்பட்டு தீர்மானப் பதிவேட்டில் இறுதித் தீர்மானத்தின் கீழ் அனைத்து உறுப்பினர்களின் ஒப்புதல் பெறுதல்.
- ஒவ்வொரு கூட்டத்திலும் கடந்த கூட்டத்திற்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட செலவினம் வாசிக்கப்பட்டு குழுவின் ஒப்புதல் பெற்று தீர்மானம் இயற்றப்படுதல்.
- குழுக் கூட்டத்தில் அனைத்துப் பதிவேடுகளும் குறிப்பாக ரொக்கப்பதிவேடு, வங்கிக் கணக்குப் புத்தகம், தீர்மானப் பதிவேடு ஆகியவை உறுப்பினர்கள் பார்வைக்கு வைக்கப்படுதல்.
- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் கணக்குப் பதிவேடுகள் சான்றளிக்கப்பட்ட தணிக்கையாளர் (Chartered Accountant) மூலம் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகள் குழுவின் ஒப்புதலுக்குப் பிறகு வட்டார கல்விக் குழுவிற்கு அனுப்ப வேண்டும். ஆண்டறிக்கைப் பிரதிகள் கிராமப் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

**சமுதாயப் பங்கேற்பு**

தற்பொழுது அனைவருக்கும் கல்வி அளிக்கும் திட்டத்தினை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றி, மாணவர்களைச் சேர்த்தல், தக்க வைத்தல், பள்ளியினுடைய அன்றாடச் செயல்பாடுகள் செவ்வனே செயல்பட உதவி புரிதல் போன்ற நடவடிக்கைகளில் மக்களின் பங்கு நேரடியாக இருக்க, கிராமக் கல்விக்குழுக்கள் உருவாக்கப்பட்டு சிறப்பாக செயல்பட வேண்டும். இதுவே இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். பள்ளிகளுக்கான தேவைகள் பற்றி ‘‘கிராமக் கல்விக் குழு’’ கூட்டங்களில் விவாதித்து முடிவெடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் பள்ளிகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

**பள்ளியும் சமுதாயப் பங்கேற்பும்**

- ஊராட்சி மன்றமும், கிராமக் கல்விக்குழுவும் இணைந்து கல்வி மேம்பாட்டிற்காகப் பாடுபடுதல்.
- தொண்டுள்ளம் கொண்ட வசதியுள்ளவர்களை அடையாளம் கண்டு பள்ளிகளின் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்துதல்.
- சமூக வளர்ச்சியில் அக்கறையுள்ள, படித்த அறிவாற்றல் உள்ள எழுச்சிமிக்க இளைஞர்களையும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் அணுகி அவர்களின் செயல்திறனைப் பள்ளியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துதல்.
- கிராமத்தோடு நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்பு கொண்டுள்ள அனைத்து அரசு அலுவலர்களையும் பள்ளிவிழாக்களிலும், கிராமக் கல்விக் குழுக்களின் திட்டப் பணிகளிலும் ஈடுபட வைத்து, பள்ளியின் மீது கிராம மக்களுக்கு உள்ள ஆர்வத்தை வளரச் செய்தல்.

**அ. உள்ளாட்சி மன்றங்களின் பங்கு**

பள்ளிகள் வளர்ச்சி பெற மக்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பும் மிகத் தேவையானதாகும். அவரவர் பகுதிகளில் உள்ளவர்களின் நிலைகளை நன்கு

உணர்ந்தவர்களாக உள்ளாட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் உள்ளனர். பள்ளிக்குத் தேவையான கட்டிடங்கள், குடிநீர், மின்விளக்கு வசதி ஆகியவற்றை ஏற்படுத்துதல், நூலகத்திற்கு தேவையான புத்தகங்களை அளித்தல், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் நிதியைப் பெறுதல், தங்கள் பகுதியில் உள்ள பள்ளியின் மேம்பாட்டுக்கு உரிய தீர்மானங்களை நிறைவேற்றிச் செயல்படுத்துதல், அரசு அலுவலர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி அதன் மூலம் அரசின் திட்டங்களை பள்ளியின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துதல், தீர்மானம் இயற்றி அதனை தலைவரின் மூலம் கிராமக்கல்விக் குழுவிற்குத்தெரிவித்து, வளர்ச்சியினை அடைய முற்படுதல். அனைத்துப் பாகுபாடுகளையும் ஒதுக்கிவிட்டு தங்கள் பகுதியில் உள்ள அனைத்து குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதற்கு உதவுதல் போன்ற பணிகளில் உள்ளாட்சி மன்றங்களின் பணி முக்கியமானதாகும்.

### ஆ. மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்கேற்பு

ஒரு பெண் கல்வி கற்றால் அக்குடும்பமே கற்றதாகும். பெண்களின் கல்வியறிவின் அவசியத்தை உணரச் செய்து, இத்திட்டத்தில் பங்கேற்கச் செய்யலாம். படிக்காததின் விளைவுகளையும், அவற்றினால் ஏற்படும் இன்னல்களையும் மற்ற குழு உறுப்பினர்களுடன் சேர்ந்து விவாதிக்கலாம். ஜூன் மாதத்தில் அப்பகுதியில் உள்ள அனைத்து குழுக்களும் இணைந்து ஊர்வலங்கள், பேரணிகள், விழிப்புணர்வு முகாம்கள் போன்றவற்றினை நடத்தி 100 சதவீத மாணவர்களின் சேர்க்கைக்கு வழி வகுக்கலாம். இடைநின்ற குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களை மீண்டும் பள்ளிக்கு வர ஏற்பாடு செய்யலாம். வளர்ந்த நிலையில் உள்ள குழுக்களின் மூலம் பள்ளிக்குத் தேவையான உதவிகளைப் பெறலாம்.

### இ. புரவலர்களின் பங்கேற்பு

ஒவ்வொரு பள்ளியின் வளர்ச்சிக்கும் நிதி முக்கியமானதாகும். புரவலர்களின் மூலமாகக் கிடைக்கும் நிதியினைப் பெற்று அதனை பள்ளியின் வளர்ச்சிக்காகவும், நன்றாகப் படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள் வழங்கவும், மிகவும் ஏழை மாணவர்களுக்குத் தேவையான கல்வி உபகரணங்களை வழங்கவும் பயன்படுத்தலாம்.

### ஈ. பெற்றோர்களின் பங்கேற்பு

கிராமப்புறங்களில் பள்ளிகளின் மீது பெற்றோர்களின் அக்கறை மிகவும் குறைவாக உள்ளது. பெற்றோர்களைப் பள்ளிக்கு வரவழைத்து குழந்தையின் வளர்ச்சியில் அவர்கள் பங்கையும் உணர்த்தி அவர்களின் குழந்தைகளின் திறனை வெளிக்கொணரும் வகையில் அவ்வப்போது விழாக்களை நடத்தி அவற்றில் பெற்றோர்களையும் பங்கு பெறச் செய்யலாம், இதனால் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களுக்கிடையே நல்ல இணைப்பை ஏற்படுத்த இயலும்.

### உ. ஆசிரியர்கள் பங்கேற்பு

ஆசிரியர்கள், கிராம மக்கள், நகர மக்கள் எனத் தனித்தனியாக இல்லாமல் ஒருவருடன் ஒருவர் பழகும்போது மாணவர்களின் சேர்க்கைக்கு அப்பகுதி மக்களின் ஒத்துழைப்பைப் பெற முடியும். ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு பகுதியைத் தத்தெடுத்து, வாரம் ஒரு முறை அப்பகுதிக்குச் சென்று, பெற்றோர்களுடன் தொடர்பு கொண்டு, குழந்தைகள் கல்வி நிலையைத் தெரிவித்தும் இடைநின்ற குழந்தைகளின் பெற்றோர்களைச் சந்தித்து பள்ளிக்குத் திரும்ப வரச்செய்ய, அப்பகுதி மக்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவது அவசியம். இதோடு சேர்ந்து அப்பகுதியில் உள்ள ஏழை மக்களின் வறுமைக்கு தீர்வுகான பல உதவிகள் செய்யலாம்.

### ஊ. பெற்றோர் ஆசிரியர் கழகம்

எற்கெனவே பள்ளிகளில் செயல்பட்டு வரும் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் மற்றும் சங்க உறுப்பினர்கள் கிராமக் கல்விக் குழுவினருடன் இணைந்து, பள்ளி முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் அனைவரும் ஈடுபடலாம்.

### ஊ. இளைஞர் மன்றத்தின் பங்கேற்பு

நம் நாட்டில் இளைஞர்களின் அளப்பரிய சக்தி பயன்படுத்தப்படாமலேயே உள்ளது. இளைஞர் மன்றத்தினரை விழிப்புணர்வு ஊர்வலங்களிலும், குழந்தைகள் கல்வி பதிவேட்டிற்கான கணக்கெடுப்புப் பணிகளிலும் ஈடுபடுத்தலாம், மேலும் இடைநின்ற மாணவர்களைக் கண்டு பிடித்து அவர்களை மீண்டும் பள்ளியில் சேர்க்க இளைஞர் மன்றங்களை நாடலாம். இளைஞர்களின் சக்தியைப் பள்ளி மேம்பாட்டிற்காகப் பயன்படுத்திக் கொள்வது சிறந்ததாகும்.

<u>ஆதாரம்:</u> குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றிட கண்காணிப்பு முறையினை செயல்படுத்துதல், உணர்வூட்டல் மற்றும் திறன் மேம்பாடு பயிற்சியாளர் கையேடு

# இரண்டு தீர்வுகள்

கும்பகோணம் தீ விபத்துக்குப் பிறகும்கூட, தமிழகத்தில் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள 258 பள்ளிகளில் 151 பள்ளிகளில் தீயணைப்பான் இல்லை என்று சுட்டிக்காட்டியுள்ளது பொதுக்கணக்குக் தணிக்கைத்துறை அறிக்கை, அதுமட்டுமல்ல, மாநகராட்சிக் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளில் மொத்தம் 1001 கழிப்பறைகள் தான் உள்ளன, சுகாதாரமான குடிநீர் இல்லை என்றும் கூட இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது மாநகராட்சிப் பள்ளிகளுக்கு மட்டுமே உரித்தான பிரச்சனை அல்ல, எல்லா நகராட்சி, பேரூராட்சி பள்ளிகளிலும் இதே நிலைமை தான். இதற்கு முக்கியமான காரணம், உள்ளாட்சி அமைப்புகள் பள்ளிகள் மீது ஆர்வம் காட்டுவதில்லை. அங்கு பணியாற்றும் ஆசிரியர்களும் தனிப்பட்ட அக்கறை எடுத்துக்கொண்டு செயல்படுவதில்லை.

தாங்கள் பணிபுரியும் பள்ளிக்கு கூடுதல் கழிப்பறை வேண்டும் அல்லது தீயணைப்பான் வேண்டும் என்று கோரிக்கை வைத்து போராடிய ஆசிரியர் அமைப்புகள் மிக அரிது. அவர்களது போராட்டங்களும் கோரிக்கைகளும் மக்களுக்குத் தெரியாதது அல்ல. பொறுப்புள்ள ஆசிரியர்கள் தலைமை வகிக்கும் சில பள்ளிகளில் மட்டுமே, உள்ளாட்சியின் தயவுக்கு காத்திராமல், ரோட்டரி, அரிமா போன்ற அமைப்புகள் உதவியுடன் அடிப்படை வசதிகள் கிடைக்கப்பெறுகின்றன.

எல்லா உள்ளாட்சி அமைப்புகளும் மக்கள் பணத்தைச் செலவிடுவதற்கென்றே 'அரிய' திட்டங்களை வைத்துள்ளன. உதாரணமாக. சாலை போடுதல், வணிக வளாகம் கட்டுதல், புதிய பஸ்நிலையம் அமைத்தல், ஆழ்துளைக் கிணறுகள் போன்றவை. இவைதான் அவர்களுக்குப் 'பயனுள்ள' பணிகள், அரசுப் பள்ளிகளின் அடிப்படை வசதிகள் குறித்து அவர்களுக்கு அக்கறை கிடையாது. ஏனென்றால், உள்ளாட்சி அமைப்புகளில் பதவி ஏற்றவுடன், அந்தஸ்துக்கு ஏற்ப தங்கள் குழந்தைகளை தனியார் பள்ளிகளில் சேர்த்து விடுகிறார்கள், 90 சதவிகித அரசு ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் தங்கள் குழந்தைகள் அரசுப்பள்ளியில் சேர்ப்பதே இல்லை. ஆகவே, தங்கள் குழந்தைகள் படிக்காத பள்ளிகள் குறித்து இவர்களுக்கு அதிக ஆர்வம், அக்கறை இருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

இவர்களுக்கே நம்பிக்கை இல்லாதபோது, குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலத்தை அமைத்துத்தர விரும்பும் சாதாரண ஏழை மக்களுக்கு என்ன நம்பிக்கை ஏற்படும்? அவர்களால் வேறு என்ன செய்ய முடியும்? அவர்களும் அதிக கல்விக்கட்டணம் செலுத்தி, தனியார் பள்ளிகளில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்கின்றனர். 'மாநகராட்சிப் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை 31 சதவீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது' என்று தணிக்கைத் துறை அறிக்கை சுட்டிக்காட்டும்போது ஏற்படும் வேதனைக்காக, நாம் யாரைக் குறை சொல்வது? மாநகராட்சிப் பள்ளிகளுக்கே இந்த நிலைமை என்றால், ஊரகப்பகுதிகளில் உள்ள பள்ளிகளில் நிலைமை என்னவாக இருக்கும்?

அரசுப் பள்ளிகளை உள்ளாட்சி அமைப்புகளும் மக்களும் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் புறக்கணிப்பது தொடருமானால், தமிழகம் முழுவதும் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பள்ளி உள்கட்டமைப்புகள் வீணாகிப் போகும் அபாயம் உள்ளது. இது மக்களுக்கு மாபெரும் இழப்பல்லவா?

இந்த மோசமான சூழலைத் தவிர்க்க இரு தீர்வுகள்தான் உள்ளன.

இந்தப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் வீணாகாமல், மக்களுக்குக் குறைந்த செலவில் கல்வி வழங்க இப்பள்ளிகளை இரு நேரப்பள்ளிகளாக மாற்றலாம். காலையில் அரசு ஆசிரியர்கள் பாடம் நடத்தட்டும். பிற்பகலில் இப்பள்ளிகளை அப்பகுதியில் சிறப்பாக இயங்கும் தனியார் பள்ளியின் பொறுப்பில் விட்டு, அரசே குறைந்த கல்விக் கட்டணத்தை நிர்ணயிக்கட்டும்.

தனியார் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு இருக்குமானால், அரசு ஊழியர்களும் அரசுப் பள்ளி ஆசிரியர்களும் தங்கள் குழந்தைகளை அரசுப்பள்ளியில்தான் சேர்க்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கினாலே போதும், அனைத்து அரசுப் பள்ளிகளும் தானே தரமானதாக மாறிவிடும். ஏனென்றால், விவிலியம் சொல்வதைப்போல, "எந்தத் தந்தையும், தன் மகன் அப்பம் கேட்டால் கல்லைத் தருவானா?".

**–தினமணி, 20.11.2008**

# சூழ்நிலைகளுக்கு பலியானவர்கள்

**–தேபாஷின் பானர்ஜி, குழந்தை உரிமைகள் செயல்பாட்டாளர், கொல்கத்தா**

சிறையில் இருக்கும் பெண் கைதிகளுக்கும் அவர்களது குழந்தைகளுக்குமான உரிமைகளை தருவனவாக உள்ளன.

**உச்சநீதிமன்றம் நுழைகிறது:**

வயது வந்தோர்க்கு கூட சிறைச்சாலைகள் மோசமான இடமே, குழந்தைகளுக்கோ அவை பயங்கரமானவையாக உள்ளன. மோசமாக பாதிக்கப்பட்டுள்ள பெண் கைதிகளின் குழந்தைகள் நலனுக்கான சிறப்பு விதிகள் சிறை விதிகள் குறிப்பேட்டில் இல்லை. இந்த குழந்தைகள் இளங்குற்றவாளியாக இல்லை என்றாலும், சிறையில் பிறந்ததாலோ, தாயோடு இருந்தாக வேண்டிய வயதினராக இருப்பதாலோ, வெளியே வசிக்க இடமில்லாதவர்களாகவோ உள்ளனர்.

விசாரணை கைதிகளைப்பற்றிய ஒரு பொதுநல வழக்கை விசாரிக்கிற போது உச்சநீதிமன்றம் இந்த குழந்தைகளின் விசயத்தில் ஒரு முழுமையான வழிகாட்டல்கள் கொண்ட தொகுப்பை வெளியிட்டுள்ளது. ஆர்.டி. உபாத்தியாய் என்பருக்கும் ஆந்திர மாநில அரசுக்கும் நடந்த வழக்கில் 2006 ஏப்ரல் 13ல் தீர்ப்பு வெளியானது. இந்திய சிறைகளில் உள்ள குழந்தைகளின் நிலையை ஆராய்ந்தபிறகு, சிறைச்சூழல் குழந்தைகளின் வளர்ச்சிக்கு பொருத்தமற்றது என்று திரும்பவும் உறுதிபடக் கூறியுள்ளது.

குழந்தைகளின் நலன் பற்றிய தேசியக்கொள்கைகள், சர்வதேசியக்கொள்கைகள், இந்திய சிறைகளில் பெண்கள், குழந்தைகள் நிலை ஆகியவற்றையும், அந்தத் தீர்ப்பு கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளது. அதன்படி, இந்த குழந்தைகளுக்கு உறுதி செய்ய வேண்டிய குறைந்தபட்ச வசதிகள் வருமாறு:

- அவன் (அல்லது) அவளின் தாயோடு சிறையில் இருக்கிற ஒரு குழந்தை விசாரணை கைதியைப்போலவோ, தண்டனைக் கைதியை போலவோ நடத்தப்படக்கூடாது. அந்த குழந்தைக்கு உணவு, இருப்பிடம், மருத்துவ சேவை, உடை, கல்வி, பொழுது போக்கு வசதிகள் கிடைப்பது என்பது அந்தக் குழந்தைக்கான உரிமையாகக்கருதப்பட வேண்டும்.
- ஒரு பெண் கைதி சிறைக்கு வந்த அன்றோ, அதன் பிறகோ கர்ப்பமாகி இருப்பது தெரியவந்தால் பெண் மருத்துவ அதிகாரி அதனை சிறைக் கண்காணிப்பாளருக்கு தெரிவிக்க வேண்டும். அவரை சிறைக்கு அனுப்புவதற்கு முன்பு , சிறை

நிர்வாக அதிகாரிகள் பிரசவத்துக்கு முன்னும் – பின்னும், தாய்க்கும் குழந்தைக்கும் தர வேண்டிய செய்ய வேண்டும்.

- சிறையில் இருப்போரின் குழந்தைகளுக்கு உறவினர் வருகை என்பது உரிமையாக தரப்பட வேண்டும். பெண்கைதிகளின் ஆறு வயதுக்கும் குறைவான குழந்தைகளின் விசயத்தில் நீதிமன்ற உத்தரவுகள் இல்லாமலே தேவையானவற்றை செய்ய, குறிப்பிட்ட தனித்துவமான வழக்குகளில் சிறை அதிகாரிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.
- இந்த குழந்தைகளுக்கு சரியான கல்வியும் பொழுது போக்கு வசதிகளும் செய்துதரப்பட வேண்டும். பெண் கைதிகள் சிறையில் வேலை செய்து கொண்டு இருக்கும் போது, அங்கே உள்ள குழந்தை காப்பகத்திலோ, நர்சரியிலோ சிறை ஆயா அல்லது சிறை பெண் வார்டன் பொறுப்பில் குழந்தைகள் வைக்கப்பட வேண்டும். மூன்று வயதுக்கு குறைந்த குழந்தைகள் காப்பகத்திலும், மூன்று வயதுக்கும், ஆறு வயதுக்கும் உட்பட்டவர்கள் நர்சரியிலும் வைக்கப்பட வேண்டும். சிறையின் பெண் வார்டன் குழந்தைகளுக்கும், சிறையின் பெண் அலுவலர்கள் குழந்தைகளுக்கும் இந்த வசதி நீட்டிக்கப்படலாம். இத்தகைய நர்சரி, காப்பகம் ஆகியவற்றை சிறை வளாகத்திற்கு வெளியே நடத்துபவரை சிறை நிர்வாகம் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- சிறு குழந்தைகளை வைத்துக்கொண்டுள்ள பெண் கைதிகள், சின்ன குழந்தைகளை வைத்திருக்க வசதிகள் இல்லாத கிளைச்சிறைகளில் அடிக்கடி அடைக்கப்படுகின்றனர். உடலியல், உளவியல் மற்றும் சமூக ரீதியான வளர்ச்சியை தரக்கூடிய வசதிகள் இல்லாத சிறைகளில் அவர்களை வைக்கக் கூடாது.

குற்றவாளிகளும், குற்றம் சுமத்தப்பட்டவர்களும் கூட்டமாக உள்ள ஒரு இடத்தில் குழந்தைகளை வளர்ப்பது அவர்களின் ஆளுமைத்திறன் வளர்ச்சிக்கு தீமையானது. டாக்டர் A.M. துவாரகாதாஸ் மோதிவாலா அவர்களால் தயாரிக்கப்பட்டு சஞ்சய் பாரிக் அவர்களால், சமர்பிக்கப்பட்ட குழந்தைகள், சிறுவர்களுக்கான உணவு அளவுகோலும் இந்த தீர்ப்பில் இணைக்கப்பட்டுள்ளது. தாய்ப்பால் அல்லாத, குழந்தையின் உணவுத் தேவையைப்பற்றி அதில் பேசப்பட்டு உள்ளது. தாயால் பாலூட்ட முடியாமல் போனால், தண்ணீர் கலக்காத புதிய பால் குழந்தைக்கு தரலாம். பாலில் தண்ணீர் சேர்த்து அதனை நீர்த்து போகச் செய்ய கூடாது என அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஏழைகளாக உள்ள பெண்கைதிகளின் குழந்தைகள் ஏற்கனவே

சத்துக்குறைவாய் இருப்பார்கள். பாலை நீர்த்துப்போகக் செய்வது அந்த குழந்தைகளை பாதகமான சூழ்நிலையே முக்கியக் காரணமாக இருக்கிறது. இந்திய மாதிரி பதிவு அமைப்பால் பதிவு செய்யப்பட்ட வயது மற்றும் பாலினம் சார்ந்த மரணங்களின் அளவுகளை மதிப்பிட்டால் கடந்தகாலம் மட்டும் அல்ல, இப்போதும்கூட ஒரு வயது முதல் 34–39 வயது வரையிலான ஆண்களின் இறப்பு விவரங்களை விட பெண்களின் இறப்புகள் அதிகமான அளவு இருப்பது தெரியவரும்.மிக கடினமான பிரசவகாலம் உள்ளிட்ட உடல்நலமில்லாத காலங்களில் கூட பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் போதுமான மருத்துவ உதவியோ, கவனிப்போ கிடைக்காமல் இருப்பது அல்லது சரியான நேரத்தில் கிடைக்காமல் இருப்பது போன்ற சமூக நடைமுறைகள்தான் இவ்வளவு அதிகமான பெண்கள் மரணத்துக்கு காரணமாக அமைகிறது. பெண்களின் எண்ணிக்கைக் குறைவு அல்லது ஆறுவயதுக்குட் பட்ட குழந்தைகளின் பாலினவிகிதாச்சாரம் குறைந்து வருதல் என்பது வெளிப்படையான ஆதாரமாக சமீப ஆண்டுகளில் மாறிப்போனது.நாடு முழுவதையும் மொத்தமாக எடுத்துக்கொண்டால் 1981 முதல் 2001க்குள்ளாக பெண் குழந்தைகளின் எண்ணிக்கை 4.5சதவீதம் குறைந்துபோனது அல்லது 1000 ஆண்களுக்கு 971 பெண்கள் ஆக இருந்தது இப்பொழுது 937 ஆக குறைந்தது.

பாரம்பரியமாகவும் வரலாற்றுரீதியாகவும் ஆண்கள் அதிகமாக இருக்கும் ஹரியானா,பஞ்சாப் மாநிலங்கள் மற்றும் சில இடங்கள் தவிர ஹிமாச்சல் பிரதேஷ், குஜராத் மற்றும் ராஜஸ்தான், மகாராராஷ்டிர மாநிலத்தின் சில பகுதிகளில் இளம்பெண்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லை என்பதற்கு 1981ல் ஆதாரம் இல்லாத நிலை இருந்தது. ஆனால் 2001க்குள் தெளிவான ஆதாரம் என்பது அப்பட்டமாக வெளிப்பட்டது. பஞ்சாபில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை விகிதம் 13 சதவீதமாக குறைந்து, பெண்களின் எண்ணிக்கை என்பது 1981க்கும் 2001க்கும் இடையில் 908 லிருந்து 793 ஆக குறைந்தது. ஹரியானாவில் 9 சதவீதம் குறைந்து, 902 லிருந்து(1981ல்) 820 ஆக (2001ல்) குறைந்தது. இந்தியாவின் வடமேற்கு பகுதியான ராஜஸ்தான், குஜராத் கூட இந்த மோசமான குறைபாட்டை சமீபத்திய பத்தாண்டுகளில் அனுபவித்தது. 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பை பொறுத்தவரை நாடு முழுவதும் உள்ள 49 மாவட்டங்களில் ஆறு வயதுக்குட்பட்ட 1000 ஆண் குழந்தைகளுக்கு 850 பெண் குழந்தைகள் இருக்கின்றன. 1991 லிருந்து 2001 வரையிலான காலகட்டத்தில் இளம் வயதுக்காரர்களின் விகிதாச்சார எண்ணிக்கை இந்த மாவட்டங்களில் 83லிருந்து 60 ஆக குறைவதை இந்த வட்டாரத்தில் காலம் காலமாக

இருந்துவருகிற பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளைக் கொண்டு விளக்கிவிட முடியாது.

**தடுப்பு) சட்டம்** என இந்த சட்டம் அறியப்படுகிறது.அல்ட்ராசவுண்ட் மிஷின்களை விற்பதையும், பயன்படுத்துவதையும் கண்காணித்தல்,வரைமுறைப்படுத்தல் மூலம் சட்டத்தை அமலாக்குவது சட்டத்திருத்தத்துக்கு பிறகு மேலும் கடுமையாக்கப்பட்டுள்ளது.

மத்திய ஆரோக்கியம் மற்றும் குடும்பநல அமைச்சகத்துக்கு இந்த சட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு உள்ளது.சட்டத்தின் நிறைவேற்றத்தை அனைத்துமட்டங்களிலும் கண்காணிப்பதற்காக மத்தியக் கண்காணிப்புக்குழு மற்றும் பொருத்தமான அதிகாரிகள், மாநில, மாவட்ட அளவிலான ஆலோசனைக்குழுக்கள் ஆகியவற்றை அது அமைத்துள்ளது.சர்வதேச நன்கொடை ஏஜென்சிகளான ஐக்கிய நாட்டு மக்கள்தொகை நிதியம்,ஐக்கியநாட்டு குழந்தைகள் நிதியம்,மற்றும் இந்திய மக்கள்தொகை அமைப்பு ஆகிய அமைப்புகள் இதற்கு ஆதரவளித்தன.தேசிய அளவிலான ஆதரவு கொள்கையையும்,தகவல் தொடர்பு செயல்திட்டத்தையும் உருவாக்குவதில் ஐ.நா.மக்கள்தொகை நிதியம் உதவியுள்ளது. மற்றவர்களையும் இணைத்துக்கொண்டு மருத்துவ நிறுவனங்கள், உடல் நல வல்லுனர்கள், காவல் துறையினர் பங்கேற்கும் ஆய்வரங்கங்களை நடத்துகிறது.

### விழிப்புணர்வு செயல்பாடுகள்

அச்சு மற்றும் ஒளிபரப்புத்துறை ஊடகங்களின் மூலமாக இந்த சட்டத்தைப்பற்றிய விழிப்புணர்வை

| | | |
|---|---|---|
| தானியம்/ பருப்பு வகைகள் | – | 60–120 மற்றும் 150–210 கிராம் |
| காய்கறிகள் | – | 30–45கிராம் |
| பால் | – | 500 மிலி (தாய்பால் இல்லையென்றால்) |
| கிழங்குகள் | – | 50 மற்றும் 100 கிராம் |
| பச்சை இலை காய்கறிகள் | – | 50 கிராம் |
| மற்ற காய்கறிகள் | – | 50 கிராம் |
| பழங்கள் | – | 100 கிராம் |
| சர்க்கரை | – | 25 மற்றும் 30 கிராம் |
| கொழுப்பு, எண்ணை | – | 20 மற்றும் 25 கிராம் |

ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.உதாரணமாக, 'கரு ஆணா, பெண்ணா என தெரிந்து கொள்வது என்பது இங்கே அனுமதிக்கப்படுவதில்லை அல்லது செய்யப்படுவதில்லை என்று மிக தெளிவாக தெரியும் படியாக கிளினிக்குகளில் எழுதப்படவேண்டும் என்று வெகுமக்கள் ஊடகத்தில் ஒரு விளம்பரம் வழிகாட்டுகிறது.மாவட்ட,தாலுகா அளவில் சுவர் எழுத்துக்கள், பேனர்கள் மூலம் இந்தச் சட்டத்துக்கு

# குழந்தை பாலின விகிதத்தை மேம்படுத்துவதில் கொள்கை மற்றும் கொள்கைக்காக வாதாடுவதன் பாத்திரம்

**–லீலா விசாரியா**

விரிவான விளம்பரம் தரப்பட்டுள்ளது. பாலினத் தேர்வு கருச்சிதைவுகளுக்கு உதவுவது, பயிற்சி எடுப்பது, போன்றவற்றை செய்தால் வரும் பின்விளைவுகளைப் பற்றிய சுவரொட்டிகள் நாடு முழுவதும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த விஷயம் பற்றி எழுதப்பட்ட கட்டுரைகள் நூல்களாக தொகுக்கப்பட்டிருக்கின்றன. மக்களின் விழிப்புணர்வுக்கும் விவாதத்துக்கும் ஏற்றவகையில் "அடமாஷா", "கடவுளின் இடது கை" எனும் திரைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

பெண்குழந்தைக் கருக்களை கருச்சிதைவு செய்யும் செயலுக்கு உடன்படமாட்டோம் எனும் உறுதிமொழியை பள்ளிக்குழந்தைகளை எடுக்கச்செய்யவேண்டும். பெண் குழந்தைகள் எண்ணிக்கை அளவு மிக குறைவாக இருக்கிற ஒரு நிலப்பிரபுக்கள் இனத்தை சாந்தவர்களை குஜராத்தில் 2006ல் லட்சம் மக்கள் முன்னே உறுதிமொழி எடுக்க வைத்த நிகழ்ச்சியும் நடந்தது.

**சவால்கள்**

அனைத்துப் பிறப்புகளும் பதிவு செய்யப்படாவிட்டால் பெண்குழந்தைகளுக்கு ஆதரவாக வாதாடுவதும், கடுமையாக கொள்கையை அமலாக்குவதும், ஏற்படும் விளைவுகளை அளவிடுவது என்பதும் கடினமாக இருக்கும்.

**யார் இவற்றை செய்வார் ?**

சட்டரீதியாக இவற்றைச் செய்வதன் எல்லையையும், இவற்றுக்கு ஆதரவாக செயல்படுவோரின் எல்லையையும், நம்முன் உள்ள சவால்களையும் நாம் நெருக்கமாக பரிசீலிக்கவேண்டும்.பாலின விகிதம் பெண்களுக்கு எதிராக உள்ள பகுதிகளில் நடத்தப்பட்ட சில தரமான ஆய்வுகளின்படி, அரசு மருத்துவமனைகளில் பெண்கருவை சோதித்து அறியும் சோதனை இருக்காது என்றும் அதற்காக தனியார் மருத்துவமனைக்கு போகவேண்டியிருக்கும் என அங்கே உள்ள பெண்களுக்கு நன்றாகத் தெரிகிறது. அது எப்படிப்பட்ட பரிசோதனை என்பதும் அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதும் அவர்களுக்குத் தெரிகிறது. தனியார் மருத்துவமனைகளில் கருச்சிதைவுக்கான வசதிகள் இருந்தாலும்,இலவச கருச்சிதைவு செய்துகொள்வதற்காக அரசு மருத்துவமனைகளுக்குப் பெண்கள் செல்கின்றனர். கரு பரிசோதனையை தனியார் மருத்துவமனையில் செய்து கொண்ட விபரத்தை அவர்கள் வெளியிடுவதில்லை.(விசாரியா–2004:பரூயா–2004)

**விளக்கத்தில் குழப்பம்**

பெண்களுக்கு பாதகமான முறையில் உள்ள ஆண்–பெண் விகிதாச்சாரத்தை பற்றிய (PNDT) சட்டத்தைப்பற்றி செய்யப்பட்டுள்ள பிரச்சாரம் மக்களிடையே நல்ல விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருந்தாலும் சில குழப்பமும் உள்ளது.

சில நிறுவனங்களும் வாடிக்கையாளர்களும் இந்தச் சட்டப்படி அனைத்து கருச்சிதைவுகளும் (பாலின தேர்வு இருந்தாலும், இல்லாவிட்டலும்) சட்டவிரோதமானவை என விளக்கமளிக்கத் தொடங்கியுள்ளனர். கர்ப்பத்தைக் கலைப்பதற்கான சேவைகளின் சட்டத்தன்மை மற்றும் அந்தச் சேவைகள் கிடைப்பதற்கான சூழல்கள் அல்லது கர்ப்பத்தை மருத்துவரீதியாக கலைப்பதைப்பற்றிய சட்டத்தை (எம்டிபி சட்டம்) பற்றிய அறிவு மக்களிடையே மிகவும் குறைவாக இருப்பதை சில நுட்பமான ஆய்வுகள் காட்டுகின்றன (ஹெல்த் வாட்ச் 2004). கருவைக் கலைப்பது என்பது பெண்களின் உரிமை என்பதற்கும், ஆணா. பெண்ணா என அறியும் சோதனையும், அதனை வைத்து பெண்கருவை கலைப்பது ஒரு பெண்குழந்தையின் பிறக்கும் உரிமையை மீறுவது என்பதும் ,பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் சட்டங்களுக்கு எதிரானது என்றும் பெண்கள் பார்க்க இயலாமல் உள்ளனர்.

விரிவான ஆவணங்களை வைத்திருக்க வேண்டியிருப்பது,குற்றம் சுமத்தப்பட்டு விடுவோமோ என்ற அச்சம்,விரிவான கண்காணிப்பு நடைமுறை ஆகியவற்றால் சில கிளினிக்குகள் கருச்சிதைவை செய்வதையே ஒட்டுமொத்தமாக நிறுத்திவிட்டன.பரிசோதனையை ஆதாரமாகக் கொண்டு கருவின் பாலினம் பற்றி கிளினிக்குகள் தருகிற தகவல் உத்தரவாதம் இல்லாததாக இருக்கிறது என்றும் குற்றம் சுமத்தப்பட்டது.

**சட்டரீதியான கட்டுப்பாடுகள்;**

மூன்றாவதாக,சட்டரீதியான கட்டுப்பாடுகளின் பின்னணியில்,கொஞ்சம் தயக்கமான ஒரு விஷயம் அவ்வப்போது வெளியாகிறது. பெண்களோடும், அவர்களோடு தொடர்புடைய குடும்பங்களோடும்,

கருச்சிதைவு மற்றும் பிற சேவைகளை தருகிற நிறுவனங்களோடும், விவாதிக்கும்போது எச்சரிக்கையான முறையில் அதனைத் தீர்மானிக்கவேண்டும். பெண்கருக்களை கலைப்பதை சிலர் மருத்துவக் குறைபாடுகளுடன் கூடிய கருக்களை கலைப்பதனுடன் சமமாக புரிந்து கொள்கிறார்கள். சட்டரீதியாக செய்யக்கூடிய, உடல்ரீதியாக குறைபாடுள்ள கருக்களை கலைப்பதும், சமூகரீதியாக வெறுக்கப்படுகிற பெண்கருக்களை கலைப்பதும் கருத்துரீதியாக தெளிவாக இருக்கிறது. ஆனால் புரிந்து பின்பற்றுவது என்பது சிரமமானது. மருத்துவரீதியாக குறைபாடுகள் உள்ள கருவும், பெண்கருவும் பிறக்க அனுமதிக்கப்பட்டு விட்டால் பராமரிப்பு செலவு வைக்கக்கூடியவை.சாதாரணமானவர்களை விட பெண்கள் வீட்டுக்கு வருமானம் உருவாக்குபவர்கள் அல்ல. பெற்றோர்களின் உணர்வுபூர்வமான, பணரீதியான நல்வாழ்வுக்கு இவர்கள் தீங்கு ஏற்படுத்துபவர்களாகி விடலாம். அப்படிப்பட்ட நிலைக்கு பதில் அவர்கள் பிறக்காமலே போய்விடலாம்.இத்தகைய தன்மைகொண்ட பல விவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

**புது தொழில்நுட்பங்கள்**

நான்காவதாக,மருத்துவ தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுவரும் வேகமான மாற்றங்கள் அவற்றை கட்டுப்படுத்துவதில் சட்டரீதியான செயல்பாடுகளுக்கு மேலும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளன. மேலும் மேலும் புதியதாகவும், எளிதானதாகவும் ஆக தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வரும் பரிசோதனைகள் பெண்களுக்குக் கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக ,பிரசவகாலத்தில் செய்யப்படும் சாதாரண ரத்தப்பரிசோதனை மூலம் குழந்தை ஆணா,பெண்ணா என அறிந்து கொள்ளக்கூடிய புதிய ரத்தப்பரிசோதனை தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வயிற்றுக்குள் இருக்கும் கரு ஆணா, பெண்ணா என்று அறியும் சோதனையை வீட்டிலேயே கூட செய்யக்கூடிய அளவுக்கு மருத்துவ தொழில்நுட்பங்கள் விரிவடைந்து கொண்டு போவது என்பது ஆண்–பெண் சமத்துவத்துக்கும், மகனை விரும்புகிற, பெண்ணை புறக்கணிக்கிற சமூக அமைப்புகளுக்கும் விதிகளுக்கும் ஆன பிரச்சனையில் எவ்வாறு புதிய அணுகுமுறைகளை கொண்டு வரலாம் என சிந்திக்க வைத்துள்ளது.

**எதிர்ப்பு**

ஐந்தாவதாக, சில அரசுசாரா தொண்டு நிறுவனங்களால் எடுத்துச்செய்யப்பட்ட அனேக எதிர்ப்பு இயக்கங்களும்.ஆதரவு செயல்பாடுகளும் பாலினத் தேர்வு என்பது சட்டவிரோதம், பாகுபாடானது, மற்றும் பெண்குழந்தையின் அடிப்படை உரிமைகளை மீறுகிறது என்று எதிர்க்கும் போதே, பாலினத் தேர்வின் மீதான தடையையும்,பாலின தேர்வுக்கு இட்டுச் செல்லக்கூடிய கருச்சிதைவை முறைப் படுத்தவேண்டிய தேவையையும் ஒன்றோடொன்று இணைக்க முயன்றுள்ளன, பாலினத் தேர்வு கருச்சிதைவை தடுப்பதற்காக ,எல்லா கருச்சிதைவுகளும் முறைப்படுத்தப் படுமானால், எம்.டி.பி, சட்டத்தின் கீழ் செய்யப்படும் சாதாரண கருச்சிதைவுக்கு போனால் கூட பெண்கள் கஷ்டப்படும் நிலை வரும்.

**சரியான பரிணாம வளர்ச்சியின் குறைபாடு.**

ஆறாவதாக, பெண் கருக்கொலைக்கு எதிராக வாதாடுவதற்காக, அச்சு ஊடகம், கேட்கக் கூடியவை பார்க்கக்கூடியவை மற்றும் இணைய தளங்கள் என ஏராளமான பிரச்சார விஷயங்கள் இருந்தாலும், அவை எதையாவது சாதித்துள்ளனவா உதாரணமாக நடவடிக்கைகளில் மாற்றம் என்ற வகையில் அவை எதை சாதிக்க விரும்புகின்றன என்பது பற்றி மிக சமீப காலம் வரை எவ்வித ஆய்வும் செய்யப் படவில்லை. அந்தப் பிரச்சார விஷயங்களின் உள்ளடக்கமும் பெண் உரிமை சார்ந்த தொலை நோக்குப்பார்வையோடோ அல்லது பாலினப் பார்வையோடோ உருவாக்கப்பட்டதாக இல்லை. உதாரணமாக, யார் எதிரி ? மாமியாரா ? அவரிடம் உள்ள ஆணாதிக்கத் தன்மையுள்ள செயல்பாடுகளா ? பெண் சிசுக்கொலையை எதிர்ப்பதற்கு ஆதரவான ஏராளமான விஷயங்கள் அறிவுபூர்வமான விஷயங்களை விட உணர்ச்சிபூர்வமான விஷயங்களுக்குத்தான் அதிகமாக வேண்டுகோள் விடுக்கின்றன.

தகவல் தொடர்புப் பிரச்சார உத்திகள் ஏதாவது கண்ணுக்கு தெரியக்கூடிய விளைவை ஏற்படுத்தி இருக்கின்றனவா என மதிப்பிடுவதற்காக மிக சமீபத்தில் யுஎன்எப்பிஏ (UNFBA) அமைப்பு ஒரு ஆய்வை நடத்தியது. எந்தப் பாலின தேர்வு மூலம் பெண்குழந்தைகளை இல்லாமல் செய்வது என்பது, ஆண் குழந்தை தான் வேண்டும் எனும் வலுவான கருத்து இருக்கிற காரணத்தால் அனேக பேருக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக, நியாயப்படுத்தக்கூடியதாக இருந்தது என்றும், பெண்களை வளர்த்து படிக்கவைப்பதும் திருமணம் செய்து கொடுப்பதும், பெண்களின் எதிர்காலம் நல்லவிதமாக இருக்கவேண்டும் என்பதும் காரணங்களாக சொல்லப்படுகின்றன.(ஜோசப்–2007)

**வயதான மகனுக்கு முன்னுரிமை**

ஏழாவதாக, சமீபத்திய ஆண்டுகளில் நடத்தப்பட்ட விரிவான ஆய்வும், தொண்டுநிறுவனங்களின் செயல்பாடுகளும் குறைவான பாலின விகிதம் என்பது வயதான மகனுக்கான விருப்பத்தேர்வை பொறுத்துள்ளது என்று எடுத்துக்காட்டியுள்ளன. இந்தப் போக்கின் தலைகீழ்மாற்றமாக ஆண் குழந்தைகளுக்கு சமமாகப் பெண்குழந்தைகளைக் கருதும் மதிப்பீடுகளுக்கு கொண்டுவருவது என்பது பெண்ணின் பொருளாதார மதிப்பீடு, அந்தஸ்து என ஒட்டுமொத்தமாக அமைப்புரீதியான மாற்றங்களை கொண்டு வருவதில் அடங்கியுள்ளது. பெண்களுக்குக் கல்வி கிடைப்பது, வேலைத்திறன் சார்ந்த பயிற்சிகளை அளித்து வேலைவாய்ப்புகளை உருவாக்குவது உள்ளிட்ட ஆலோசனைகள் குடும்பத்தில் அவர்களின் அந்தஸ்தை உயர்த்தும். எனவே, குடும்பங்கள் அனுபவபூர்வமாக உணர்ந்தபிறகு, பெண்கருக்களை அழிப்பதை விட்டுவிடுவார்கள்.

ஆண்களைவிட பெண்கள்தான் வயதான காலத்தில் பெற்றோரிடம் பாசமாக இருப்பார்கள். அம்மாக்களிடம் பாசமாக ஒட்டிக்கொண்டிருப்பார்கள் என்று அவர்கள் சொன்னாலும் பெண்களை விட ஆண்குழந்தைகளைத் தான் விரும்புகிறார்கள் என்கிற அளவுக்கு பெண்களுக்கு உள்ளேயும் ஒரு அளவுக்கு ஆணாதிக்க இயல்புகள் உள்ளன.

**நடத்தை மாற்றம் மீதான வலியுறுத்தல்.**

எட்டாவதாக, ஆதரவுப் பிரச்சார உத்திகள் திறன் மிக்கததாக மாறுவதற்காக மேற்கண்ட விஷயங்களை எப்போதும் நினைவில் வைத்துக்கொண்டு பேசவேண்டும். பாலினத் தேர்வின் நீண்டகால விளைவுகளால் பெண்கள் இல்லாத சமூகத்துக்கான வாய்ப்பு, வளந்த பையன்களுக்கு பெண்கள் கிடைக்காமல் போவது,மக்களின் நடவடிக்கைகளில் ஏற்படுத்தும் பாதிப்பு,ஆகியவற்றை அங்கீகரிப்பதாகவும் அது இருக்கவேண்டும். வேறு ஒரு குடும்பத்துக்கு செல்லும் பெண் குழந்தைகளுக்கு செலவு செய்வது வீணானது என்னும் கருத்தை, தமது பெற்றோருக்கு பெருமை சேர்த்த பெண்களின் உண்மைக்கதைகளைக் கொண்டு வாதாடுவதன் மூலம் சந்திக்கவேண்டும். பெண்களின் மதிப்பையும், பெண்களைத் தாழ்வாகக் காட்டுகிற பண்பாட்டு விஷயங்களை புரிய வைத்து பெற்றோர்களின் மனச்சாட்சியை தட்டி எழுப்புவதே இன்றைய தேவை. பிசி\பிஎன்டிடி சட்டங்களை அமலாக்குவதிலேயே ரொம்ப அதிகமாக கவனத்தை செலுத்தியுள்ளோம். பெண்குழந்தைகள் மதிப்புக்குரியவர்கள் எனும்படியாக மக்களின் நடத்தையில் மாற்றம் கொண்டுவரும் வழிகளைக் கண்டுபிடிப்பதற்கு மிகவும் குறைவாகவே கவனம் செலுத்தியுள்ளோம்.

**மருத்துவக் கல்விப்பாடத்தில் திருத்தம்**

ஒன்பதாவதாக இந்தச் சட்டத்தை உணர்வு பூர்வமாக நிறைவேற்றுவதற்காக இந்திய மருத்துவ கவுன்சில், மகப்பேறு இயல், மற்றும் மகப்பேறு மருத்துவர்களின் சம்மேளனம் ஆகியவற்றின் உறுப்பினர்களோடு சேர்ந்து வேலை செய்யவேண்டிய அவசரத்தேவையும் இருக்கிறது. மருத்துவர்களுக்கான நடத்தை நெறிகள் பற்றிய விவாதம் மற்றும் மருத்துவர்களின் வேலைமுறையை நேரடியாக பாதிக்கிற, பல்வேறு சட்டங்களை உள்ளடக்கியதாக மருத்துவ பாட கல்வித்திட்டமும் பாடநூல்களும் இருக்கவேண்டும் என அனேகர் விவாதிக்கின்றனர்.

பாலினத் தேர்வு கருச்சிதைவுக்கு எதிராக செயல்படுவதற்கான கொள்கைகள் சுகாதார ஊழியர்களைத் தாண்டிச் சென்றாக வேண்டும்.ஏனென்றால் இத்தகைய விஷயங்கள் சட்டத்துக்கு வெளியே எளிதாக நடக்கக்கூடியவை. இந்தப் பிரச்சனைக்கு வேராக உள்ள பெண்களுக்கு எதிரான பண்பாட்டுப் பாகுபாட்டை இந்தத் கொள்கைகள் தகர்க்கவேண்டும். பெண்களின் மதிப்பைப் பற்றி ஆழமாக வேர் பிடித்துள்ள நடத்தைகளை மாற்றியமைப்பது என்பது மிக கடுமையான ,ஆனால் அவசியமான பணி.

**- Economic&Political Weekly March 2008**

# மதிய உணவுத்திட்டம் குறித்த உச்ச நீதிமன்ற இடைக்கால உத்தரவுகள்

மதிய உணவுத்திட்டம் குறித்து 2001 நவம்பர் 28ம் தேதி முதல் அவ்வப்பொழுது உச்ச நீதிமன்றம் இடைக்கால உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. முக்கிய ஆணைகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

**அடிப்படை உரிமை:**

''அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் பயிலும் ஒவ்வொரு குழந்தைக்கும், ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் 200 நாட்களாவது, 8–12 கிராம் புரதச்சத்து மற்றும் குறைந்தது 300 கலோரிகளுடன் தயாரிக்கப்பட்ட மதிய உணவு வழங்கப்படவேண்டும்''. (28 நவம்பர் 2001 தேதியிட்ட ஆணை).

**கட்டணம் இல்லை:**

''சமைத்த உணவுக்கான கட்டணம் எந்த சந்தர்ப்பத்திலும் குழந்தைகளிடமிருந்தோ அல்லது அவர்கள் பெற்றோர்களிடமிருந்தோ வசூலிக்கப்படக்கூடாது''. (20 ஏப்ரல் 2004 தேதியிட்ட ஆணை).

**மத்திய அரசு உதவி:**

''உணவு தானியங்களை மதிய உணவாக சமைப்பதற்குத் தேவையான செலவுகளுக்காக மத்திய அரசும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்''. (20 ஏப்ரல் 2004 தேதியிட்ட ஆணை).

**சமையற்கூடங்கள்:**

''சமையற்கூடம் கட்டுவதற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கலாம்''. (20 ஏப்ரல் 2004 தேதியிட்ட ஆணை).

**தலித் சமையலாளுக்கு முன்னுரிமை:**

''சமையல் செய்பவர் மற்றும் உதவியாளர் பணிக்கு தலித், தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்''. (20 ஏப்ரல் 2004 தேதியிட்ட ஆணை).

**தரமான பாதுகாப்பு:**

''தரமான உள்கட்டமைப்பு; மேம்பட்ட வசதிகள் (பாதுகாப்பான குடிநீர் போன்றவை) கண்காணித்தல் (தொடர்ச்சியான ஆய்வு போன்றவை) மற்றும் பிற தரமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் ஆரம்பப்பள்ளி குழந்தைகளுக்கு சத்தான உணவு வழங்குவதற்கேற்ப உணவுப்பொருட்களின் தரத்தை முன்னேற்றுவது ஆகியவற்றிற்கான முயற்சி எடுக்கப்பட வேண்டும்''. (20 ஏப்ரல் 2004 தேதியிட்ட ஆணை).

**கோடைக்கால விடுமுறைகள்:**

''நீண்ட நாட்களாக மழை இல்லாததால் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கோடைக்கால விடுமுறை நாட்களில் கூட மதிய உணவு வழங்கப்படவேண்டும்''. (20 ஏப்ரல் 2004 தேதியிட்ட ஆணை).

**இணைந்த தரமான ஆய்வு:**

இந்திய அரசு மற்றும் இந்திய உணவுக்கழகம் (FCI) மதிய உணவுத் திட்டத்திற்காக சரியான நேரத்தில் நல்ல தரமான உணவு தானியங்களை வழங்க வேண்டும் என்று ஆணையிடுகிறோம். ''இந்திய உணவுக்கழகம் மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களோடு இணைந்து உணவுப் பொருட்களை கண்காணிக்க வேண்டும். உணவுப் பொருட்கள் தரம் குறைந்து இருந்தால் இந்திய உணவுக்கழகம் அவற்றிற்குப் பதில் தரமான உணவுப் பொருள் வழங்கும்''. (2001 மே 28 தேதியிட்ட ஆணை).

**Midday Meals : A Primer**

*Education Material Published on behalf of*

**TamilNadu Child Rights Protection Network by**

**Human Rights Advocacy and Research Foundation (HRF)**

No.10, Thomas Nagar, Little Mount, Saidapet, Chennai-600 015
Ph:044-2235 3503, Fax:044-2235 59 05,
E.mail:hrf@md3.vsnl.net.in, Website:www.voicesofstruggletn.org